பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

வலம்புரி
The Valampuri

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 23 | வெள்ளிக்கிழமை | (08.08.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 232

# புலிகளுக்கு அனுப்பிய வரைபில் மாற்றம் செய்யப்படவில்லை!

## ஜனாதிபதிக்கு பிரதமர் பதில் கடிதம்

(நமது நிருபர்)

**விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை வரைபே தங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா தெரிவித்துள்ளார்.**

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் தனக்கும் அனுப்பி வைத்துள்ள திட்ட வரைபில் வித்தியாசங்கள் இருப்பதாகவும் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள திட்ட வரைபை மாற்றம் செய்யாமல் தனக்கு அனுப்பி வைக்குமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் ஜனாதிபதி கோரியதை அடுத்தே பிரதமர் மேற்படி கடிதம் ஒன்றை ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ளார்.

பிரதமரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதிக்கும் அரசாங்கம் அனுப்பி வைத்துள்ள யோசனைகள் ஒரே மாதிரியானவையாகும்.இந்த யோசனைகள் அடங்கிய வரைபே சமாதானத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் பிரதிநிதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அரசாங்கத்திற்கும் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது தெரிவிக்கப்பட்ட யோசனைகளும் அடங்கிய வரைபையே விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பிரதிநிதிகளினால் தயாரிக்கப்பட்ட ஆவணமானது அரசினால் தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் இருந்து எந்த வகையிலும் வித்தியாசப்படவில்லை அரசின் முழுமையான அங்கீகாரத்துடனேயே விடுதலைப் புலிகளுக்கு இது சமர்ப்பிக்கப்பட்டது என்றும் பிரதமர் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம)

## இடைக்கால சபை குறித்து பிரதமர்-ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான முரண்பாடுகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையின் போது; இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைபுகளில் காணப்படும் முரண்பாடுகள் குறித்து ஜனாதிபதிக்குப் பிரதமர் விளக்கம் அளித்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளே இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபு சம்பந்தமான தமதுயோசனைகளை தெரிவித்த பின்னர் அது தொடர்பான விபரங்கள் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறப்படும் என்றும் புலிகளின் பதில் இம் மாத இறுதியில் கிடைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## நல்லூர் தொண்டர்களுடன் தகராறு புரிந்த இளைஞர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய உற்சவ காலக் கடமையில் ஈடுபட்டிருந்த தொண்டர்களுடன் தகராறு புரிந்த இளைஞர்கள் நால்வர் மடக்கிப்பிடிக்கப்பட்டு கலாசாரத்தைப் பேணும் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றிரவு 7.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

பொதுமக்களின் உதவியுடன் சிறப்புச் செயலணியினரால் சம்பந்தப்பட்ட நான்கு இளைஞர்களும் பிடிககப்பட்டு கலாசாரத்தைப் பேணும் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கலாசாரத்தைப் பேணும் குழுவினர் தகராறில் சம்பந்தப்பட்ட இளைஞர்களை விசாரணைக்குட்படுத்தியதுடன, எச்சரிக்கை செய்து பின்னர் இரவு 10 மணியளவில் விடுவித்தனர். (த)

## மிதிவெடியில் சிக்கியவர் கண்பார்வை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி வெடித்தினால் குடும்பஸ்தர் ஒருவர் கண்பார்வை இழந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் நேற்றைய தினம் இடம் பெற்ற இச் சம்பவத்தில் தெல்லிப்பழையைச் சேர்ந்த கந்தன் கந்தசாமி (வயது 46) என்பவரே கண்பார்வை இழந்தவராவர்.

சுன்னாகம் பகுதில் ஏற்கனவே இராணுவக் காவலரண் இருந்த பகுதியை துப்புரவு செய்ய முற்பட்ட போதே பிரஸ்தாப நபர் மிதி வெடியில் சிக்கினார். (த-7)

## க.பொ.த (உயர்தர) பரீட்சை பெறுபேறு நாளை

(கொழும்பு)

க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் நாளை வெளியிடப்படுமென பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

இப் பெறுபேறுகள் கொழும்பு பாடசாலைகளுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும் எனவும் ஏனைய பாடசாலைகளுக்கு எதிர் வரும் திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்படும் எனவும் அத்துடன் இணையத் தளத்தினூடாகவும் பரீட்சை பெறுபேறுகளை பார்வையிட முடியும்எனவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ந-5)

## புலிக்கொடி ஏற்றுவது போர் நிறுத்த மீறல் அல்ல

### எழிலன் எடுத்துரைப்பு

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் இடம்பெறும் வைபவங்களில் புலிக் கொடி ஏற்றுவது வழமையான அரசியல் நடவடிக்கை என்றும் அது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் அல்ல என்றும் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் படை அதிகாரிகளிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள், இராணுவ அதிகாரிகள், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆகிய முத்தரப்பினருக்கும் இடையே மாதாந்தம் நடைபெறும் வழமையான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போதே இது விடயம் குறித்து

(10ம் பக்கம் பார்க்க)

## இன்பருட்டி கடலில் அத்துமீறி நுழைந்த தமிழக மீனவர்கள் பத்துப் பேரை வடமராட்சி மீனவர்கள் பிடித்தனர்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி இன்பருட்டி கடற்பிரதேசத்தில் அத்துமீறி மீன் பிடித்த 10 இநதிய மீனவர்களை வடமராட்சி பிரதேச மீனவர்கள் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மடக்கிப் பிடித்து அவர்கள் வசமிருந்த மீன் பிடி உபகரணங்களுடன் நேற்றுக் காலை 7 மணியளவில் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

வடமராட்சி மீனவர்களால் இவ்விதம் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் அனைவரும் நேற்றுக் காலை 11 மணியளவில் அல்வாய் வடக்குக் கிராம சேவையாளர் எஸ்.ஜெயபவானந்தமலை மூலம் பருத்தித்துறைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது;

வடமராட்சிப்பிரதேச மீனவர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களைக் கடலிலேயே விட்டு விடுமாறு 524 படையணியின் பிரிகேடியர் தல்கா கொட, கடற்படைத் தளபதி றொகான் மற்றும் யுத்த

(10ம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்க யப்பானின் விஷேட தூதுவர் அகாஸி மிக விரைவில் இலங்கை வருவார்!

(டோக்கியோ)

தேக்கநிலை அடைந்துள்ள சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க யப்பானிய விஷேட பிரதிநிதி யசுஸி அகாஸி இலங்கை வரவிருப்பதாக யப்பான் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெற்சுரோ ஜானு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற் கொண்டு யப்பான் திரும்பிய பிரதி வெளிவிவகார அமைச்சர் அங்கு நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் நடத்திய அப் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக தேக்க நிலை அடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வேண்டிய உதவிகளை மேற் கொள்ளும் பொருட்டு யப்பானின் விஷேட பிரதிநிதி யசுஸி அகாஸி மிக விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை நகல் திட்ட

(10ம் பக்கம் பார்க்க)

## வன்னி எம்.பி. சிவசக்தி ஆனந்தன் தாக்குதலில் இருந்து தப்பினார்

### தடுக்க முயன்ற பிரதேச செயலர் படுகாயம்

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இளைஞர் ஒருவரின் தாக்குதலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்.தாக்குதலைத் தடுக்க முயன்ற வவுனியா பிரதேச செயலர் சத்தியசீலன் காயமடைந்தார்.

இடம் பெயர்ந்த மக்களை குடியமர்த்தல் தொடர்பான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசமான சேமமடுப் பாடசாலையில் வவுனியா அரச அதிபர் தலைமையில்நேற்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சிவசக்தி ஆனந்தன் கூட்ட மேடைக்கு நடந்து சென்ற வேளை அக் கூட்டத்தில் இருந்த இளைஞர் ஒருவன் இரும்பு கதிரை கொண்டு தாக்க முற்பட்டான் இதனைத் தடுத்க முற்பட்ட பிரதேச செயலர் காயமடைந்த போதிலும் நாடாளுமன்ற உறுப்பினர் எவ்வித காயமும் இன்றித் தப்பித்துக

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தேவை


தையல் வேலை தெரிந்த பெண பிள்ளைகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:- துர்க்கா தையலகம், 360, கோவில் வீதி, நல்லூர். (7504)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் ந. சிவபாதம் தலைமையில் இடம்பெற வுள்ளது. (உ-8)

# நினைவு கூரப்படுமா?




# தென்மராட்சித் தென்னந் தோட்ட அழிவுகளைப் பார்வையிட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கிளாலி,முகமாலை, எழுதுமட்டுவாள் வடக்கு, எழுதுமட்டுவாள் தெற்கு, மிருசுவில், நாகர் கோவில் ஆகிய இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் யுத்த காலத்தில் அழிவடைந்த தென்னந் தோட்டங்களை தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 12,13,14,15,16-ம் திகதிகளில் பார்வையிடவுள்ளனர்.

எனவே, பெருந்தோட்டத் திணைக்களத்தால் கிராம சேவகர் ஊடாக மேற்படி சேத விபரப் படிவங்களை அனுப்பிய தோட்ட உரிமையாளர்கள் தமது தோட்டங்களை இனங்காட்டுவதுடன் வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கும் தோட்ட நிலைவரத்தை இனங்காட்டி ஒத்துழைப்பதோடு, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபரிடம் அனுமதிக் கடிதம் பெற்று மிருசுவில் இராணுவ அதிகாரியிடம் செலுத்தி தத்தமது தோட்டங்களை பார்வையிட உதவுமாறு வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கத்தின் தலைவர் அ.நல்லதம்பி கேட்டுள்ளார். (உ)

# இனந்தெரியாத காய்ச்சலுக்கு 32 சிறார்கள் இலக்கு

### ஒருவர் நேற்று உயிரிழப்பு

(கொழும்பு)

திடீர் சுகவீனமுற்ற நிலையில் மஸ்கலிய மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 32 சிறுவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மஸ்கலிய செப்பட்டான் தோட்டத்தைச் சேர்ந்த இவ் 32 சிறுவர்களும் நேற்று முன்தினமிரவு திடீர் சுகவீனமுற்றநிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் நேற்று உயிரிழந்து விட்டார்.

இச் சிறுவர்கள் அனைவரும் 14 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன் இவர்கள் இனந்தெரியாத ஒருவகை காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (உ-10)

## பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

(திருநெல்வேலி)

தும்பளை கிழக்கு சனசமூக நிலைய நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்ற சிறு மலர்கள் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

சட்டத்தரணி பா.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி க.அரிய நாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (உ-43)

# பனாமா போட்டிகளில் கியூபா முன்னணியில்

பனாமாவில் இடம்பெற்று வருகின்ற வபான் அமெரிக்கன் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளின் 3ஆம் நாள் முடிவின் போது 16 பதக்கங்களைப் பெற்று கியூபா முன்னிலையில் உள்ளது. 12 தங்கப் பதக்கங்கள், 4 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக கியூபா 16 பதக்கங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

9 தங்கப்பதக்கங்கள், 11 வெள்ளிப் பதக்கங்கள், 7 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக அமெரிக்கா 27 பதக்கங்களுடன் 2ஆம் இடத்தினை வகிப்பதுடன் வெனிசுலா 2 தங்கப் பதக்கங்கள் உட்பட 11 பதக்கங்களைப் பெற்று 3ஆம் இடத்தில் உள்ளது. ஒரு தங்கபதக்கம் உட்பட 3 பதக்கங்களைப் பெற்ற ஆர்ஜன்ரீனா 4ஆம் இடத்தில் இருப்பதுடன், ஒரு தங்கப் பதக்கத்தை மட்டுமே வென்றுள்ள மெக்சிக்கோ 5ஆம் இடத்தில் உள்ளது. (உ-68)

# விளையாட்டுச் செய்திகள்

# ஆணழகர்களுக்கு உயிராபத்துண்டாம்

''ஆண் அழகன்'' போட்டிகளில் பங்குபற்றும் வீரர்கள் பாவிக்கும் இன்சுலின் மருந்தின் மூலம் உயிராபத்து ஏறபடக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உடற் தசைகளின் கட்டமைப்பைப் பேணுவதற்காக அநேகமான வீரர்கள் இன்சுலினைப் பாவிக்கின்றனர். இந்த இன்சுலின் மருந்தின் மூலம் மூளையின் செயற்பாடுகள் பாதிக்கபபடுவதாகவும், சிலவேளைகளில் உயிராபத்தும் ஏற்பட வாய்ப்பிருப்பதாக பிரிட்டிஷ் மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

சர்வதேச ஒலிம்பிக் பேரவையினால் இன்சுலின் பாவனை தடை செய்யப்பட்டுள்ளதும், சாதாரண ஊக்கமருந்துப் பரிசோதனைகளின் போது, இன்சுலினை வீரர் பாவித்திருப்பதை கண்டறிய முடியாது என்று மருத்துவர்கள் குறிப்பிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

## விளையாட்டுக் குழுக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு பிரதேச செயலக பிரிவு ரீதியாக விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எப்.ஜே. ரூபசிங்கம் தலைமையில் யாழ். மாவட்ட செயலககதில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்தக கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன், மற்றும் பிரதேச செயலகங்களின் விளையாட்டு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக விளையாட்டு ஒருங கிணைப்புக் குழுக்களை அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.(உ-68)

# பிரிட்டன் கோல்வ் போட்டியில் சுவீடன் வீராங்கனை சம்பியன்

பெண்களுக்கான பிரிட்டன் பகிரங்கக் கோல்வ் போட்டியில் சுவீடன் வீராங்கனை அனீகா சுரஸ்ரங் சம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளார். இதன்மூலம் பெண்களுக்கான கோல்வ் பகிரங்கப் போட்டிகள் அனைத்திலும் சம்பியன் பட்டம் வென்ற பெருமையை அனகா தனதாக்கிக் கொண்டார்.

1995 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பகிரங்க கோல்வ் போட்டியின் மூலம் தனது முதலாவது சம்பியன் பட்டத்தினை வென்றெடுத்த அனீகா சுரன்ஸ்ரங் அந்த ஆண்டில் பெண்கள் கோல்வ் போட்டிகளில் சிறந்த வீராங்கனையாகவும் தெரிவாகியிருந்தார்.

இதன்பின் தொடர்ச்சியான பல பகிரங்கப் போட்டிகளில் சம்பியன் பட்டம் வென்றிருப்பினும், முதல் முறையாக பிரிட்டனின் பகிரங்கக் கோல்வ் போட்டியில் சம்பியன் பட்டத்தைப் பெற்றதன் மூலம் அனைத்துப் பகிரங்கக் கோல்வ் போட்டிகளிலும் சம்பியன் பட்டம் பெற்றவர் என்ற பெருமையை தனதாக்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவும் ''10 வது சமூகச் சுடர்'' கையெழுத்துச் சஞ்சிகை வெளியீட்டு விழாவும் நாளை சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு யாழ். தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாசாலை மைதானத்தில் சனசமூக நிலையத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமியும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு, தொல்புரம் கிழக்கு கிராம உத்தியோகத்தர் ம.ஸ்ரீமுருகவேள், வலி. மேறகு சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கே.சிவசோதி, யாழ். தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாசாலைஅதிபர் மு.ஜெயக்குமார், சங்கானை முன்பள்ளி இணைப்பாளர் எஸ். நிறைஞ்சனா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-18)

# முழங்கால் உபாதையால் அவதியுறும் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர்

இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியின் முக்கிய வேகப்பந்து வீச்சாளராக கடந்த 10 வருடங்களாகத் திகழ்ந்த டொரன் கொக் டெஸ்ற் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து தாம் ஓய்வுபெறப் போவதாக அறிவித்திருக்கின்றார்.

முழங்காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக தான் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறிய டொரன் கொக் இதன் காரணமாகவே தாம் ஓய்வுபெறப் போவதாகவும் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் அடுத்த உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும் வரை சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாட எண்ணியுள்ளதாகவும் கோக் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜோக் செயாக் பிராந்திய அணிக்காக விளையாடி வருகின்ற 32 வயதான இவர் ஒருவருடகால இடைவெளிக்குப் பின்னர் அண்மையில் நடைபெற்று முடிந்த தென்னாபிரிக்க அணிகது எதிரான முதலிரு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடியதன் மூலம் மீண்டும் டெஸ்ட் போட்டிகளில் காலடி எடுத்து வைத்திருந்தார்.

1994 ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமான டொரன் கொக் இதுவரை 58 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 28.39 என்ற சராசரி ஓட்டப் பெறுமதியுடன் 229 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார். (உ-68)

# குரொன்ஜேயின் மரணம் குறித்து கிளம்பும் புதிய சந்தேகம்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னைநாள் தலைவர் கென்ஸி குரொன்ஜே உயிரிழக்க காரணமான விபத்தானது தற்செயலானதா? அல்லது சதி முயற்சியா? என்பது குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளன.

தென்னாபிரிக்க அணியின் முன்னைநாள தலைவர் கென்சி குரொன்ஜே 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் வெஸ்ரேன்கே பகுதியில் விமான விபத்துக் காரணமாக உயிரிழந்தார். இதன போது, இவருடன் மேலும் இரு விமானிகளும் பலியாகியிருந்தனர்.

கிரிக்கெட் ஆட்ட முன் நிர்ணய வழக்கு விவகாரத்தின் போது, குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து குரொன்ஜே கிரிக்கெட் விளையாட்டில் ஆயுட்காலத் தடைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

ஊழல் மோசடிகள் தொடர்பான மேலதிக விடயங்களை வெளியிடக் கூடும் என அஞ்சி இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என தென்னாபிரிககாவின் ஒஸ்ஸபெஸ் ஸ்போட்ஸ் சஞ்சிகையின் புதிய வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. கென்ஸி குரொன்ஜே தென்னா பிரிக்க அணிக்காக 68 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருந்ததோடு, 53 போட்டிகளுக்கு தலைமை தாங்கி 27 போட்டிகளில் தனது அணியை வெறறிபெறச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(உ-68)

# ஒலிம்பிக் இலச்சினை கோலாகல வெளியீடு

சீனாவின் தலைநகரில் 2008ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான உத்தியோகபூர்வ இலச்சினை மிகக் கோலாகலமாக அண்மையில் வெளியிடப்பட்டது.

லேசர் கதிர்க் காட்சிகள், டியிற்றல் தொழில்நுட்ப ஒளி, ஒலி அமைப்புகளுக்கு மத்தியில் சீனாவின் தனித்துவத்தினை பிரதிபலிக்கும் வகையில் சீனாவின் தலைநகரான பீக்கிங்கில் 2008 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் இலச்சினை வெளியிடப்பட்டது.

''ஜிங்'' எனப்படுகின்ற சீனாவின் பாத்திரத்தை அடையாளப்படுத்துவதாக இவ் இலச்சினை அமைந்திருக்கின்றது. (உ-68)

நல்லூர் ... நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்.

### தமிழ்நாடு அரச ஊழியர்வேலை நிறுத்த எதிரொலி

# உச்சநீதிமன்ற தீர்ப்பினால் மாநிலங்கள் அனைத்துமே பாதிக்கப்படும் என அச்சம்

## பிற்போக்கானதென தொழிற்சங்கங்கள் வர்ணிப்பு

(புதுடில்லி)

**தமிழ்நாடு அரச ஊழியர்கள் கடந்த மாதம் மேற்கொண்ட வேலை நிறுத்தம் தொடர்பான வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பானது தமிழ்நாடு அரச ஊழியர்களை மட்டுமன்றி இந்தியா முழுமையிலுமுள்ள அரச, தனியார் நிறுவன ஊழியர்களைத் திகைப்புக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது.**

அரச ஊழியர்களுக்கோ தனியார் நிறுவன ஊழியர்களுக்கோ நிர்வாகத்தை அல்லது பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் வேலை நிறுத்தங்களில் ஈடுபடும் உரிமை இல்லையென்று உச்சநீதிமன்றம் கூறியிருப்பதானது ஏனைய மாநில அரசுகளுக்கும் வாய்ப்பாகப் போய்விடும் என்று தொழிற்சங்கங்கள் கருதும் அதேநேரம், ஊழியர்களின் அடிப்படை உரிமையையே மறுக்கும் வகையில் தீர்ப்பு இருப்பதாக குறை கூறியுள்ளன.

அரச ஊழியர்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் வேலை நிறுத்தம் செய்ய அடிப்படை உரிமையோ, சட்ட உரிமையோ, தார்மீக உரிமையோ இல்லையென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. எல்லோருடைய உரிமைகளுக்காகவும் பேரம் பேச கூட்டு உத்தரவாதம் பெற்றுள்ள தொழிற்சங்கங்களுக்குக் கூட வேலை நிறுத்தம் செய்ய உரிமை இல்லையென்று தமிழ்நாடு அரச ஊழியர்கள் போராட்டம் தொடர்பான மனுமீது உச்ச நீதிமன்றத்தின் டிவிசன் பெஞ்ச் தீர்ப்பளித்துள்ளது.

குறைகளை எடுத்துக்கூறி களைவதற்கு வேறு பல வழிகள் உள்ளதாகவும் வேலை நிறுத்தங்கள் முழுமையான குழப்பத்தையும் நிர்வாக சீர்கேட்டையும் ஏற்படுத்திவிடும் என்றும் இந்தத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

**பிற்போக்கான தீர்ப்பு**

இந்தத் தீர்ப்பு பிற்போக்குத் தன்மை கொண்டது என்று இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி குறிப்பிட்டுள்ளது.

தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகள் தொடர்பான சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனத்தின் சாசனத்தில் இந்தியாவும் கைச்சாத்திட்டிருக்கும் நிலையில் அந்த உரிமையையே பறிப்பதாகவும் இந்திய அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை நிராகரிப்பதாகவும் இந்தத் தீர்ப்பு இருப்பதாக தொழிற்சங்கத் தலைவர்கள் கூறியுள்ளனர்.

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புப் பற்றிய விளக்கமொன்றைப் பெறுவதற்கு தொழிற்சங்கங்கள் உச்ச நீதிமன்றத்தை மீண்டும் அணுகக்கூடும் என்றும் கருதப்படுகின்றது. (பி-9)

## பலஸ்தீன கைதிகளை விடுவிக்கும் இஸ்ரேல் நடவடிக்கை ஆரம்பம்

(ஜெருசலேம்)

தடுத்து வைத்துள்ள பலஸ்தீனர்களை விடுதலை செய்யும் நடவடிக்கைகளை இஸ்ரேல் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளது.

மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் நோக்கத்திலேயே இஸ்ரேல் பலஸ்தீனக் கைதிகளை விடுதலை செய்ய ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்து விடுதலை செய்யப்பட்ட 340 பலஸ்தீனர்கள் மேற்குக் கரை நகரான ஜெத்னையாவில் வைத்து நேற்று முன்தினம் அவர்களது உறவினர்களிடம் இஸ்ரேலிய இராணுவத்தினால் ஒப்படைக்கப்பட்டனர்.

இஸ்ரேல் சிறைச்சாலைகளில் சுமார் 6 ஆயிரம் பலஸ்தீனர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்கள் பகுதிபகுதியாக விடுவிக்கப்படுவார்கள் என்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (பி-9)

## ஒஸாமா பின்லேடனை உலக முஸ்லிம் தலைவராக மாற்றிவிட்டது அமெரிக்கா

### லிபிய அதிபர் கடாபி குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

சர்வதேச பயங்கரவாதியென வர்ணிக்கப்படும் ஒஸாமா பின்லேடன் குறித்தும், ஈராக் மீதான அமெரிக்கத் தலையீடு குறித்தும் லிபியத் தலைவர் அமெரிக்கா மீது குற்றச் சாட்டுக்களையும் அதிருப்தியையும் முன்வைத்துள்ளார்.

ஏ.பி.சி. வானொலியில் ஒலிபரப்பான 'இந்தவாரம்' என்ற நிகழ்ச்சியல் கலந்துகொண்ட லிபியத் தலைவர் மு அம்மர் கடாபி உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றச்சாட்டுக்களையும் அதிருப்தியினையும் வெளியிட்டார்.

அமெரிக்காவினால் சர்வதேச பயங்கரவாதியாக அடையாளப் பின்லேடன் என்ற நிலைக்கு அமெரிக்கா கொண்டுவந்துவிட்டது என்றார் அதிபர் கடாபி.

அல்கெய்டாவின் பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்ப்பவன் நான். ஆனால் அமெரிக்காவின் நடவடிக்கை பின்லேடனை மிகப் பெரிய மனிதனாக மாற்றிவிட்டது. பொதுவில் அல்கெய்டா ஓர் புற்றுநோயாகும். அது ஒருமுறை வேர் விட்டுவிட்டதால் இப்போது வியாபித்துவிட்டது என்றார் கடாபி.

ஈராக் விடயம் குறித்துப் பேசுகையில், ஈராக் வியட்நாம் போல் மாறிவருகின்றது. அங்கு யுத்தம் தொடர்ந்து வருகின்றது. அமெரிக் கப்படையினர் ஈராக்கை விட்டு டிருப்பதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. அது உண்மையில்லையெனவும் அவ்வாறு புற்றுநோய் ஏற்பட்டால் இந்தப் பொல்லாத உலகை விட்டு விரைவில் வெளியேறுவதை எண்ணிப் பெருமையடைகிறேன் என்றார். (பி-2)

## ஸ்பெயினில் காட்டுத் தீ 13 பேர் பலி; 30 ரயில்வே ஊழியர்கள் மீட்கப்பட்டனர்

(மாட்றிட்)

ஸ்பெயினில் பரவியுள்ள கடுமை

கப் பரவியுள்ளதால் அருகிலுள்ள

புதிதாக அமைக்கப்பட்டுவரும்

## லிபிய அதிபர் கடாபி குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

சர்வதேச பயங்கரவாதியென வர்ணிக்கப்படும் ஒஸாமா பின்லேடன் குறித்தும், ஈராக் மீதான அமெரிக்கத் தலையீடு குறித்தும் லிபியத் தலைவர் அமெரிக்கா மீது குற்றச் சாட்டுக்களையும் அதிருப்தியையும் முன்வைத்துள்ளார்.

ஏ.பி.சி. வானொலியில் ஒலிபரப்பான 'இந்தவாரம்' என்ற நிகழ்ச்சியல் கலந்துகொண்ட லிபியத் தலைவர் மு அம்மர் கடாபி உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றச் சாட்டுக்களையும் அதிருப்தியினையும் வெளியிட்டார்.

அமெரிக்காவினால் சர்வதேச பயங்கரவாதியாக அடையாளப் படுத்தப்பட்ட ஒஸாமா பின்லேடனை தீவிரமாகத் தேடிவருவதால் அவரை மனிதப் புனிதராகவும், இறைவனின் தூதுவராகவும் அமெரிக்கா மாற்றி வருகின்றது.

இஸ்லாமிய உலகின் தலைவர் பின்லேடன் என்று அமெரிக்கா மறைமுகமாக அறிவித்து வருகின்றது. பின்லேடன் சாதாரண மனிதன். ஆனால் அவரை உலக மக்கள் முன் நிறுத்தி, நாள்தோறும் பேசிப் பேசி அவரைப் பின்தொடர்ந்து உலக முஸ்லிம்களின் தலைவர் பின்லேடன் என்ற நிலைக்கு அமெரிக்கா கொண்டுவந்துவிட்டது என்றார் அதிபர் கடாபி.

அல்கெய்டாவின் பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்ப்பவன் நான். ஆனால் அமெரிக்காவின் நடவடிக்கை பின்லேடனை மிகப் பெரிய மனிதனாக மாற்றிவிட்டது. பொதுவில் அல்கெய்டா ஓர் புற்று நோயாகும். அது ஒருமுறை வேர் விட்டுவிட்டதால் இப்போது வியாபித்து விட்டது என்றார் கடாபி.

ஈராக் விடயம் குறித்துப் பேசுகையில், ஈராக் வியட்நாம் போல் மாறிவருகின்றது. அங்கு யுத்தம் தொடர்ந்து வருகின்றது. அமெரிக் கப்படையினர் ஈராக்கை விட்டு வெளியேற மறுத்தால் அந்த நாட்டுமக்கள் பலத்த சிரமங்களை எதிர் நோக்க நேரிடும் என்றார்.

அடுத்து, இஸ்ரேல்-பலஸ்தீனத் திட்டம் குறித்து கடாபியிடம் கேட்கப்பட்டபோது வாய்விட்டுச் சிரித்த அவர், வீதிவரைபடம் என்பது தேர்தல் பிரசாரத் திற்கான அமெரிக்காவின் மற்றொரு தந்திரம் என்றார். மத்திய கிழக்கு அமைதித் திட்டம் ஒருபோதும் நடைமுறைப் படுத்தப்படாது என்ற கடாபி, அண்மையில் தனக்கு புற்று நோய் ஏற்பட் டிருப்பதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. அது உண்மையில்லையெனவும் அவ்வாறு புற்று நோய் ஏற்பட்டால் இந்தப் பொல்லாத உலகை விட்டு விரைவில் வெளியேறுவதை எண்ணிப் பெருமையடைகிறேன் என்றார்.

(பி-2)

டிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் நோக்கத்திலேயே இஸ்ரேல் பலஸ்தீனக் கைதிகளை விடுதலை செய்ய ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்து விடுதலை செய் இஸ்ரேல் சிறைச்சாலைகளில் சுமார் 6 ஆயிரம் பலஸ்தீனர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்கள் பகுதிபகுதியாக விடுவிக் கப்படுவார்கள் என்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

(பி-9)

## கல்பாக்கம் அணுஉலையில் கசிவு
## 7 மாதங்களின் பின் தகவல்

(சென்னை)

தமிழ்நாடு கல்பாக்கம் அணு உலையில் கடந்த ஜனவரியில் ஏற்பட்ட கதிரியக்கக் கசிவு தற் பொழுது வெளியே தெரியவந்துள் ளது.

இக்கதிரியக்கக் கசிவு காரணமாக 6 ஊழியர்கள் அதிக கதிர் வீச்சுக்கு உள்ளாகியிருந்தார்கள்.

ஆயினும் இந்தச் சம்பவம் 7 மாதத்தின் பின்னர்தான் தற் பொழுது வெளியுலகுக்குத் தெரிய வந்துள்ளது.

1999ஆம் ஆண்டு மார்ச் மாதம் அணுக் கழிவு நீர் கசிந்தமையால் கல்பாக்கம் பகுதியில் பலருக்குப் புற்றுநோய் ஏற்பட்டதுடன், 24 வயதுடைய ஊழியர் ஒருவர் உட்பட 4 ஊழியர்கள் மரணமடைந்தது குறிப் பிடத்தக்கது.

தற்போதைய கதிரியக்கக் கசிவு கிராம மக்களுக்கு ஏற்படுத்தக் கூடியவிளைவுகள் குறித்து சூழலைப் பேணும் இயக்கத்தினர் அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

(பி-9)

## சவுதி நபர்களின் விபரம் வெளியிடாமைக்கு கண்டனம்

(வாஷிங்டன்)

தீவிரவாதிகளுக்கு நிதியுதவி களை வழங்கியதாக குற்றம் சாட் டப்பட்டுள்ள சவூதி அரேபிய அமைப் புக்களையும் தனிப்பட்ட விபரங்க ளையும் வெளியிட அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் நிர்வாகம் மறுத்துள்ளதை முக்கிய செனற் உறுப்பினர் ஒருவர் கண்டித்துள்ளார்.

காங்கிரஸின் இந்த நடவடிக்கை மன்னிக்க முடியாததொன்று என செனற் சபையின் குழுத் தலைவி சுஹான் கொலின்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க திறைசேரித் திணைக் களம் தீவிரவாதிகளுடன் தொடர்பு பட்ட சவூதி அரேபியர்களின் விபரங் களை வெளியிட மறுப்புத் தெரிவித்த தற்கான காரணங்களை முன்வைத் துள்ளபோதும் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியாதெனக் கூறுகிறார்.

(பி-2)

## ஸ்பெயினில் காட்டுத் தீ 13 பேர் பலி;
## 30 ரயில்வே ஊழியர்கள் மீட்கப்பட்டனர்

(மாட்றிட்)

ஸ்பெயினில் பரவியுள்ள கடுமையான காட்டுத் தீ காரணமாக 13 பேர் பலியானதுடன், பலர் தீக் காயங்களுக்குள்ளாகி இருக்கின் றனர்.

இத் தீ பல இடங்களில் வேகமாகப் பரவியுள்ளதால் அருகிலுள்ள பல வீடுகள், கால்நடைகள் என்பன அழிந்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

அதேசமயம் தீ பரவியதையடுத்து ரயில் சுரங்கப்பாதையொன் றில் சிக்கியிருந்த 30ற்கும் மேற் பட்ட ரயில்வே திணைக்கள ஊழி யர்களை அவசர பாதுகாப்புப் பிரி வினர் பத்திரமாக மீட்டுள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்டுவரும் இச்சுரங்கப் பாதையில் 4 மணி நேரம் வெளியேற முடியாது ஊழி யர்கள் சிக்கியிருந்தனர்.

இவர்களைக் காப்பாற்றப் பயன் படுத்திய வாகனம் தீக்கிரையான போதும் இவர்கள் பலத்த காயங் கள் எதிலும் சிக்கிக்கொள்ளவில்லை யென ஸ்பெயின் தகவல்கள் தெரி விக்கின்றன.

(பி-2)

## ஈக்குவடோரில் அரசியல் நெருக்கடி

(க்விடோ)

ஈக்குவடோர் ஜனாதிபதி லூசியோவின் கூட்டணியில் இருந்து முக்கிய கட்சியான இந்திய முன்னணி நேற்று விலகிக்கொண்டுள்ளது.

கடந்தவருடம் இடம்பெற்ற தேர்தலின்போது ஜனாதிபதி லூசியோவின் கட்சி மகத்தான வெற்றி பெறுவதற்கு இந்திய முன்னணி பெரும் பங்காற்றி இருந்தது.

இந்த நிலையில் இந்திய முன்னணி ஆளும் கூட்டணியில் இருந்து விலகியுள்ளதால் மற்றுமொரு தேர்தல் ஈக்குவடோரில் இடம்பெறக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஈக்குவடோரிலுள்ள மொத்த சனத் தொகையில் சுமார் 25 வீத மானோர் இந்தியர்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

(பி-2)

## 343 இந்திய மீனவர் விடுதலை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் சிறைகளிலுள்ள 343 இந்திய கடற்றொழிலாளர்களை விடுவிக்க பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்துள்ளது.

குஜறாத் கடற்றொழிலாளர் ஆலோசனைச் சபையின் தகவலின்படி கடந்த ஒன்றரை வருட காலமாக பாகிஸ்தான் சிறைகளில் 343 இந்திய மீனவர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களையும் அவர்களின் 74 படகுகளையும், மீன்பிடி உபகரணங் களையும் மனிதாபிமான அடிப்படை யில் விடுவிக்க பாகிஸ்தான் இணங்கி யுள்ளதாகத் தெரியவருகின்றது.

(பி-9)

## தென்னாபிரிக்க ஜனாதிபதி
## லைபீரியாவிற்கு விஜயம்

(பிரிடோரியா)

தென்னாபிரிக்க ஜனாதிபதி எதிர் வரும் திங்கட்கிழமை லைபீரியா விற்கு விஜயம் செய்யவுள்ளார்.

லைபீரிய ஜனாதிபதி சார்ள்ஸ் ரெயிலரின் அதிகாரங்கள் கையளிக் கப்படும் நிகழ்வில் இவர் கலந்து கொள்ளவுள்ளார்.

மேற்கு ஆபிரிக்க அபிவிருத்தி வலய அமைப்பின் தலைவர் கானா ஜனாதிபதி ஜோன்கெல்பரும் இதில் கலந்துகொள்ள இணக்கம் தெரி வித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

லைபீரிய ஜனாதிபதி தனது பத வியை உதவி ஜனாதிபதி மோஸீர் பிளாவிடம் ஒப்படைக்கவுள்ளார் என் றும், அதன் பின்னர் அவர் அன்றைய தினம் அல்லது மறுநாள் நாட்டை விட்டு வெளியேறுவாரென தெரிவிக் கப்படுகின்றது.

(பி-2)

## சதாமைத் தேடியழிக்கும் முயற்சியில் திக்ரிட் நகரில் 18 பேர் கைதாகினர்

(வாஷிங்டன்)

பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின சொந்த நகரான திக்றிட்டில் அவரது ஆதரவாளர்கள் 18 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள் ளார்கள் என்று அமெரிக்க இராணு வம் கூறுகின்றது.

அத்துடன், இவர்களிடம் இருந்து பெருந்தொகையான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக அமெரிக்கா கூறுகின்றது.

சதாம் ஹுசைனை தேடியழிக் கும் பொருட்டு தீவிரமாக நடை பெற்றுவரும் இராணுவ நடவடிக்கை களின்போதே அவரின் ஆதரவாளர் கள் கைது செய்யப்படுவதாக ஈராக் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சதாம் ஹுசை னைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை களில் அமெரிக்க விசேட துருப்புக் களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவத்தை மேற் கோள்காட்டி தகவல்கள் வெளிவந் திருக்கின்றன.

(பி-9)

## இன்று ஒரு தகவல்

# கண்ணீர்

ஒரு மனிதன் இந்த உலகத்தில் வந்து சேர்ந்தவுடன் அவன் செய்யும் முதற் காரியம் அழுகை தான். ஒரு குழந்தை பிறந்தவுடன் அது ஆணா? பெண்ணா? கருப்பா? சிகப்பா? என்று பார்ப்பதற்கு முன்பு அந்தக்குழந்தை அழுகின்றதா இல்லையா என்று பார்ப்பது தான் மிக முக்கியமானது.

பிறக்கும் போது பிள்ளை அழவேண்டும். போகும்போது மற்றவர்களை அழ வைக்கவேண்டும். அப்படி இருப்பவன் தான் நல்ல மனிதன். வாழ்வாங்கு வாழ்பவன் என்பதன் அர்த்தம் இது தான். ஒருவன் மூச்சை விட்டவுடன் ''அப்பாடா போய் போய் சேர்ந்து விட்டான்'' என்று எல்லோரும் நிம்மதிப்பெருமூச்சு விட்டால் அவன் நல்ல மனிதன் கிடையாது.

அழுவதனால் என்ன நன்மை என்கின்றீர்களா? அதிக நன்மைகள் உள்ளன. உலக சுகாதார நிறுவனம் WHO இருக்கின்ற தல்லவா அதாவது WORLD Health Organisation! அதிலுள்ள சில மருத்துவர்கள் என்ன கூறுகின்றனர் தெரியுமா? அழுகை என்பது உணர்ச்சிகளை வெளிப்படுத்த கையாளப்படும் ஒரு வழி. ஒரு வடிகால்! கண்ணீர் எப்போது வரும்? அதிகமான ஆனந்தத்தில் இருக்கும் போது வரும். எல்லோருக்கும் துன்பம் வருவது இயற்கைதான். சில சமயங்களில் தாங்க முடியாத துன்பத்தையும் அனுபவிக்க வேண்டி வரும். ஆழ்ந்த துக்கத்தில் இருக்கும் போது கண்ணீரை அடக்கி வைத்தால் அது நமது உடலில் கேட்டைவிளைவிக்குமாம்.

''எரிக்லிண்டர் மேன்'' என்று ஒரு டாக்டர் இவர் ஓர் மன நோய் நிபுணர். அமெரிக்காவிலுள்ள ஒருபொது மருத்துவ மனையில் பணிபுரியும் இவர் ஒரு உதாரணம்கூறுகின்றார். ஒரு இளம் வயது தாதி அவரது தந்தைக்குத் தீராத நோய். அவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அங்கு அவரது மகளே தாதியாக இருந்த படியால் அருகிலேயிருந்து கவனித்து வந்தார். ஆனாலும் தந்தை திடீரென இறந்து விட்டாராம். மகளுக்கு மிகுந்த மன வருத்தம். என்ன இருந்தாலும் தந்தையில்லையா?ஆனாலும் அவர் ஒரு தாதியாக இருந்ததனால் தனது துக்கத்தை வெளிக்காட்டிக்கொள்ளவில்லையாம். தன்னுள்ளே வைத்து அடக்கிக்கொண்டாராம். கடைசியில் என்ன நடந்தது தெரியுமா? தந்தை இறந்து நான்கு மணித்தியாலங்களுக்குள் இவருக்கு வயிற்று உபாதைகள் வந்து விட்டதாம். கொஞ்ச நாளில் இவரும் இறந்து விட்டாராம்.

நமது ஊரில் கூலிக்கு மாரடிப்பது என்று ஒரு பழமொழி இருக்கின்றது. போய் கேள்விப்பட்டிருப்பீர்கள் தானே. சில இடங்களில் யாராவது இறந்து விட்டால் ஒப்பாரி வைக்க கூலிக்கு ஆள் பிடித்து வருவது உண்டு. அதற்கென்றும் சிலர் உள்ளனர். இது போன்று செய்வது ஏனென்று

# ஜனநாயகத்தைப் பலப்படுத்துவது குறித்த அரசின் நிலைப்பாட்டு அறிக்கை ஐ.நா.வசம்

## அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் அரசின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகள் தூதுக்குழுவிற்கு இவ்விடயம் தொடர்பான சகல விபரங்களையும் தாம் வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உருகுவேத் தூதுவராகவுள்ள றியோ பெர்னாண்டோ இக்குழுவிற்குத் தலைமை தாங்குகின்றார்.

இத்தூதுக் குழுவினருடனான சந்திப்பில் நாட்டின் தற்போதைய நிலைமை, அரசியல் தலையீடுகளைக் குறைத்தல்,நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலமும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதன் அடிப்படையிலும் நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதற்கென அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் நாம் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரசின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு 14 பாராளுமன்ற கண்காணிப்புக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய அமைச்சா பீரிஸ் எதிர்க்கட்சி அங்கத்தவர் ஒருவர் இக் குழுவிற்கு தலைமை தாங்குகின்றார்.



அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளும் இனி வெளிப்படையாகவே மேற்கொளளப்படும் என்று கூறினார்.(உ-10)

## அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும்

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவிர்த்தி செய்ய 1750 பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவிர்த்தி செய்ய மேலும் ஆயிரத்து750 ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சகல மாகாணங்களையும் சேர்ந்த பட்டதாரிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களில் 500பேர் தொழில் நுட்பம்,சுகாதாரம்,விஞ்ஞானம்,கணிதம் என்பவற்றை ஆங்கிலத்தில் போதிப்பதற்கெனத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஏனைய ஆயிரத்து 250 ஆசிரியர்களும் உயிரியல்,பௌதீக விஞ்ஞானம், வர்த்தகம், கலை,சங்கீதம், நடனம், ஆங்கிலம் ஆகிய பாட நெறிகளுக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

35 வயதிற்குட்பட்ட பட்டதாரிகள் ... கலாம் என்றும் அவ்வாறு விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தின் ஆங்கில மொழி மூல பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் எனவும் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், மேற்படி பரீட்சைக்குத் தோற்றி அவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அதில் தெரிவு செய்யப்பட்டோர் தேசிய கல்வி நிறுவகத்தில் 6 மாத கால வதிவிடப் பயிற்சியைப் பெற்றுக்கொள்வார்கள்.

அக்காலத்தில் அவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சு

## இராசி பலன்

**08. 08. 2003**

**(ஆடி 23, வெள்ளி)**

ஏகாதசி - பி.ப. 04.59 வரை

கேட்டை - மு.ப. 11. 27 வரை

இராகுகாலம் - 10.34 - 12.04

சுபநேரம் - 06.04- 07.34

ஏகாதசி விரதம். வரலட்சுமி விரதம்.

**மேடம்**

எதிர்பாராத செலவு, உத்தியோக பலிதம், தேசாந்திர வாசம், காரிய தாமதம்.

காட்டிக்கொள்ளவில்லையாம். தன்னுள்ளே வைத்து அடக்கிக்கொண்டாராம். கடைசியில் என்ன நடந்தது தெரியுமா? தந்தை இறந்து நான்கு மணித்தியாலங்களுக்குள் இவருக்கு வயிற்று உபாதைகள் வந்து விட்டதாம். கொஞ்ச நாளில் இவரும் இறந்து விட்டாராம்.

நமது ஊரில் கூலிக்கு மாரடிப்பது என்று ஒரு பழமொழி இருக்கின்றது. போய் கேள்விப்பட்டிருப்பீர்கள் தானே. சில இடங்களில் யாராவது இறந்து விட்டால் ஒப்பாரி வைக்க கூலிக்கு ஆள் பிடித்து வருவது உண்டு. அதற்கென்றும் சிலர் உள்ளனர். இது போன்று செய்வது ஏனென்று நினைக்கின்றீர்கள். இறந்து போனவருக்கு நெருங்கிய உறவினர்கள் இருப்பார்கள். அவர்கள் தமது துயரத்தை உள்ளடக்கிக்கொண்டிருப்பார்கள். அப்படி இருப்பவர்கள் இந்த ஒப்பாரிக்காரர்களைப் பார்த்தால் அழுது விடுவார்கள். பாரம் குறைந்து விடும். அது தான் விஷயம்.

கண்ணீரை அடக்கி வைத்தால் ஆஸ்த்துமா, ஒற்றைத் தலைவலிகள் கூட வருமாம் அதனால் கண்ணீரைப்பற்றி ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கின்றது. அமெரிக்காவிலுள்ள நியூஆர்லியன்ஸில் ஒரு மெடிக்கல் ஸ்கூல் உள்ளது. அங்கு பீட்டர் கேஸல் என்று ஒருவர் கண்ணீரைப்பற்றி ஆராய்ச்சி செய்கின்றார். இதற்கென கண்ணீர் பரிசோதனை நிலையம் என ஒன்றும் அங்குள்ளது. இரத்தப்பரிசோதனை நிலையம் போன்று கண்ணீர் பரிசோதனை நிலையம்.

கண்ணீரை பரிசோதித்துப்பார்த்தால் பல உடல் கோளாறுகளை கண்டு பிடித்து விடலாமாம். இதில் ஒரு கஷ்டம் என்னவென்றால் உண்மையாக ஒருவரை அழ வைத்து வரும் கண்ணீரை சேகரிக்க வேண்டும். சாதாரணமாக வரும் கண்ணீர் Basal Tears உண்மையான அழுகையின் போது வரும் கண்ணீர் Refles Tears இவை இரண்டும் கலந்து விட்டால் கண்ணீரின் தன்மை மாறி வீடும். அதனால் சரியான முடிவு பெறுவது சிரமமாகிவிடும்.

உதாரணமாக கண்ணீரைச் சோதிக்க வேண்டும் என்று ஒருவர் வருகின்றார் என்று வைத்துக்கொள்ளுங்கள். உடனே அவரது கன்னத்தில் ''பளார்'' என்று அறை கொடுக்கவேண்டும். வலி தாங்காமல் அவர் அழவேண்டும். அப்போது வரும் கண்ணீரை சேகரிக்க வேண்டும். அல்லது கட்டணம் எவ்வளவு என்று கூறி பில்லை முதலில் கொடுத்து விட்டாலும் உண்மையான கண்ணீர் எடுக்கலாம்.

சர்வதேச மருத்துவர் குழுவொன்று என்ன கூறுகின்றது தெரியுமா? டென்ஷன் குறையவேண்டும் என்றால் நன்றாக அழ வேண்டுமாம். Hyper tension pepticulcer இவையெல்லாம் கூட அழுகையால் சரியாகி விடுமாம். இன்னும் கொஞ்ச நாட்களில் ஆஸ்பத்திரிகளில் அழுவதற்குப் பயிற்சி அளிக்க தனிப் பிரிவே ஆரம்பிக்கப்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

## 08. 08. 2003

**(ஆடி 23, வெள்ளி)**

**ஏகாதசி - பி.ப. 04.59 வரை**
**கேட்டை - மு.ப. 11. 27 வரை**
**இராகுகாலம் - 10.34 - 12.04**
**சுபநேரம் - 06.04- 07.34**

ஏகாதசி விரதம். வரலட்சுமி விரதம்.

**மேடம்**
எதிர்பாராத செலவு, உத்தியோக பலிதம், தேசாந்திர வாசம், காரிய தாமதம்.

**இடபம்**
பொருள் விரயம், நண்பர்கள் விரோதம், குடும்பக் கவலை, எதிர்பாராத நன்மை.

**மிதுனம்**
பிரயாண நன்மை, காரிய அனுகூலம், புதிய சிந்தை, சிநேகிதர் சந்திப்பு.

**கடகம்**
தேக ஆரோக்கியம், ஜனவசியம், முயற்சி கைகூடும், போசன சுகம்.

**சிங்கம்**
குழப்பமான நிலை, அஜீரண ரோகம், பணக் குறைவு, காரிய தாமதம்.

**கன்னி**
புத்தி சஞ்சலம், தன விரயம், தேக ஆரோக்கியக் குறைவு, பிரயாணம்.

**துலாம்**
பெண்கள் நட்பு, நற்கீர்த்தி, எடுத்த காரியம கைகூடும், பொருள் சேர்க்கை.

**விருச்சிகம்**
பேசனசுகக் குறைவு, எந்தக் காரியத்திலும் தாமதம், கௌரவக் குறைவு, தனவிரயம்.

**தனுசு**
வெகுமானம், தர்மம், கௌரவமான நிலை, காரிய சித்தி.

**மகரம்**
சோம்பல் நிலை, காரிய தாமதம், சுப செலவு, சிந்தனை மிகுதி.

**கும்பம்**
எடுத்த கருமங்கள் கைகூடும், பொருள சேர்க்கை, கீர்த்தி, குடும்ப மகிழ்ச்சி.

**மீனம்**
அன்பளிப்பு, பெரியோரால் மதிக்கப்படுதல், மேன்மை, ஆரோக்கியம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

செய்யப்படவுள்ளனர்.

இவர்களில் 500பேர் தொழில் நுட்பம், சுகாதாரம், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றை ஆங்கிலத்தில் போதிப்பதற்கெனத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஏனைய ஆயிரத்து 250 ஆசிரியர்களும் உயிரியல், பௌதீக விஞ்ஞானம், வர்த்தகம், கலை, சங்கீதம், நடனம், ஆங்கிலம் ஆகிய பாட நெறிகளுக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

35 வயதிற்குட்பட்ட பட்டதாரிகள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க தோற்றி அவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அதில் தெரிவு செய்யப்பட்டோர் தேசிய கல்வி நிறுவகத்தில் 6 மாத கால வதிவிடப் பயிற்சியைப் பெற்றுக்கொள்வார்கள்.

அக்காலத்தில் அவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

**திருமறைக் கலாமன்றத்தின் ஆதரவில்**

# யாழ்.நகரில் நடைபெறவிருக்கும் நாட்டுக்கூத்துக் கலைவிழா

(கொழும்புத்துறை)

திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 14ஆம்திகதி வரையான ஐந்து நாட்களுக்கு நாட்டுக்கூத்து விழா யாழ். நகரில் பிரமாண்டமான அளவில் நடை பெறவுள்ளது.

ஐந்து நாட்களும் காலையில் கருத்தரங்குகளும் மாலையில் கலை நிகழ்வுகளுமாக நடைபெறவுள்ள இவ்விழாவில் மட்டக்களப்பு, மன்னார், மலையகம், வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசக் கூத்து மரபுகள் அந்தந்தப் பிரதேசங்களைக் கொண்ட கலைஞர்களால் அரங்கேற்றப்படுவதுடன் அவை தொடர்பான ஆய்வரங்குகளுடன் பல்வேறு செயற்பாடுகளும் நடைபெறவுள்ளன.

இதேவேளை, இந்த நாட்டுக் கூத்து விழாவை முன்னிட்டு தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டி ஒன்றும் நடைபெறவுள்ளது. வருடந்தோறும் திருமறைக்கலா மன்றத்தால் நடாத்தப்படும் தமிழ் விழா இவ வருடம் நாட்டுக்கூத்து விழாவாக கொண்டாடப்படவுள்ளது. (பி-51)

## இந்து மாநாட்டு எழுச்சி விழா

# போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசளிப்பு

(கோப்பாய்)

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் இடம்பெற்ற இரண்டாவது உலக இந்து மாநாடு எழுச்சி விழா போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி வெறறியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோட்டக்கல்விப்பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், செஞ்சொற்செல்வர் ஆறுதிரு முருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நீர்வேலி கந்தசாமி தேவஸ்தான பிரதம குரு இராஜேந்திர சுவாமி நாதக்குருக்கள் இந்துக்குருமார் ஒன்றியச் செயலாளா ச.சந்திரசேகர சர்மா ஆகியோர் ஆசியுரைகளை வழங்கவுள்ளனர்.

வெற்றியீட்டிய கோப்பாய் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 550 மாணவர்கள் சான்றிதழ்களையும் பரிசில்களையும் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கான நிதியை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வழங்கியுள்ளார். (உ-79)

யாழ்ப்பாணம்.

# மங்களம் தரும் வரலட்சுமி விரதத்தை மாங்கல்யம் நிலைக்கப் போற்றிடுவோம்

சங்கற்பத்துடன் செய்யும் சமய காரியங்களும், புண்ணியச் செயல்களும் விரதம் என்று வடமொழி அகராதியில் கூறுப்பட்டுள்ளது. விரதம் எமது வாழ்க்கையைப் பல்வேறு நிலைகளில் நல்வழிப படுத்தி வருகிறது.

பெண்களுக்கு தன் கணவனை அன்றி பிறரொருவரை ஒருபொருளாகக் கருதாதநிலை விஷேட விரதமாக அமைகிறது. இவ்வகையில் உலக இயக்கத்திற்கு காரணமாக இருக்கும் சக்தியை நோக்கி பெண்கள் சிரத்தையுடன் அனுட்டிக்கும் விரதங்களில் வரலட்சுமி விரதம் மிக உயர்ந்ததாக காணப் படுகின்றது.எமது வாழ்க்கைக்கு தேவையான ஐஸ்வரியத்தை தருபவளான ஸ்ரீலட்சுமியை விதிப்படி மனம், வாக்கு, காயங்களால் வழிபாடாற்றுபவர்கள் இஷ்டசித்திகளைப் பெற்றுய்வார்கள்.

இவ்விரதமானது ஆடிமாதத்திலே வளர்பிறையில் பௌர்ணமிக்கு முன்வரும் வெள்ளிக்கிழமை அனுஷடிக்கப்படுவது மரபு. சுமங்கலிப் பெண்களின் மாங்கல்யம் நிலைத்திருக்க இவ்விரதத்தை அனுட்டிப்பர். கன்னிப் பெண்கள் தங்களுககு நல்ல கணவன்கிடைக்கவென இவ்விரதத்தை அனுட்டிப்பர்.

இவ்விரதத்தின்போது வரலட்சுமியை கும்பத்திலே எழுந்தருளச்



இன்று வரலட்சுமி விரதம்

செய்து உபசாரம், பூசை செய்வதுடன் அக்கும்பத்திலே ஒன்பது முடிச்சிட்ட நூலைவைத்து பூசை செய்து நிவேதனம் வைத்து அர்ச்சனை செய்து வழிபாடாற்றுவர்.

பூசையின் இறுதியில் கும்பத்தில் வைக்கப்பட்ட நூலை அணிந்து கொள்வர். வீடுகளில் பூசைசெய்ய வசதியற்றவர்கள் கோயில்களில் லட்சுமிக்கு நடைபெறும் விசேடபூசைகளில் கலந்துகொண்டு வழிபாடாற்றுவார்கள். இவ்வகையில் இவ் விரதத்தை திடசங்கற்பத்துடன் நோற்பதன் மூலம் பெண்கள் சகல ஐஸ்வரியங்களையும் பெற்றுக் கொள்ளமுடியும். இதனை விளக்க ஓர் கதையும் உண்டு.

பத்ரச்ரவஸ் என்ற ஒரு மன்னன் சிறந்த விஷ்ணு பக்தன் சுரசந்த்ரிகா அவனது மனைவி இந்த அரச தம்பதியினருக்குச் சியாமபாலா எனும் செல்லமகள் இவர்கள் தம் மகளை மாலாதரன் எனும் சக்கரவர்த்திக்கு திருமணம்செய்து கொடுத்தார்கள். இத் தம்பதிகள், மாலாதரன் ராஜ்ஜியத்திற்கு திரும்பினார்கள்.

சில காலத்தின்பின்னர் செந்தாமரைச் செல்வியான ஸ்ரீலட்சுமிதேவி வயது முதிர்ந்த சுமங்கலப் பெண் வேடம் பூண்டு சுரசந்த்ரிகாவின் அரண்மனைக்குச் சென்றாள். தனியாக இருந்த சுரசந்தரிகாவிடம் அன்போடுவரலட்சுமி விரதத்தைப் பற்றி விளக்கிக் கூறி அதனை கடைப்பிடிக்கும்படி சொன்னாள். ஆனால் அரசியோ வயதான சுமங்கலி தன்னிடம் யாகங் கேட்க வந்துள்ளதாக எண்ணி விரட்டி விட்டாள். விரட்டப்பட்ட லக்சுமிதேவி அரசியின் மகளான சியாமபாலாவிடம் சென்றபோது சியாமபாலஅன்னையைச் சமாதானப்படுத்தி வரலட்சுமி விரத மகிமையைக் கேட்டு உபதேசமும் பெற்றாள். விரத மகிமையால் செல்வங்களும் பல பெற்றாள். ஆனால் தாய் சுரசந்த்ரிகா ஸ்ரீலட்சுமியை அவமானப்படுத்தியதன் காரணமாக ஏழையானாள். விபரம் அறிந்த மகள் சியாமபாலா ஒரு குடம் நிறைய தங்கத்தைப் பெற்றோர்களுக்கு அனுப்பிவைத்தாள். ஆனால் அவர்களது தீவினையால்

**குகதாச சர்மா சிவகுமார்**

அதுகரியானது. இதனை அறிந்த சியாமபாலா தன் தாயிடம் வரலட்சுமி விரதத்தைச் சொல்லி பூஜிக்கும்படி கூறினாள். அதனைக் கடைப்பிடித்து பூஜை செய்து இழந்த செல்வங்களைப் பெற்று சுகவாழ்வு பெற்றாள்.

கொல்லா விரதமொன்று கொணடவரே நல்லோர் என்றார் தாயுமானவர். ஆகவே விரதத்திற்கான நியமங்களை உரிய முறைப்படி கடைப்பிடிக்காமல் அனுட்டிக்கும் எந்நோன்பும் பயன்அளிக்காது என்பதை மனதிற்கொண்டு சிரத்தையுடன் விரதங்களை அனுட்டித்து இஷ்ட சித்திகளை பெற்றுய்வோமாக.

## கொடியேற்றம்

(கோப்பாய்)

கோப்பாய் சக்கராழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 11ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடை பெறவுள்ளது. (உ-79)

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூா முருகன் ஆலய உற்சவத்தை யொட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்று வரும் தெய்வீக இசையரங்கில் ஆறாம் திருவிழாவான இன்று தாரணி ரஞ்சனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

(உ-18)

## நயினையில் இன்று வீரமுரசு வார அரங்கு

(யாழ்ப்பாணம்)

பிரதேச ரீதியாக இடம்பெற்று வருகின்ற வீரமுரசு-வார அரங்கு நிகழ்வு இன்று நயினாதீவு கலையரங்கில் ஜீவன் மாஸ்ரர் தலைமையிலும் நயினாதீவு கணேச வித்தியாலயத்தில் கரன் தலைமையிலும் இடம்பெறவுள்ளது.

இவற்றில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்புரையாற்ற உள்ளார்.

(உ)

# மாலுமிப் பயிற்சியை முடித்தவர்களுக்கு கப்பல் கொம்பனிகளில் வேலைவாய்ப்பு

**அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு**

(கொழும்பு)

கப்பல் மாலுமிகளாக பயிற்சி பெற்ற இலங்கையர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கப்பல் கம்பனிகளில் வேலை பெற்றுக் கொடுக்க தமது அமைச்சு துரித நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக கப்பல்துறை, துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஆராய கடந்த ஜூன் மாதம் மேற்படி அமைச்சினால் 13அங்கத்தவர்களைக்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது.

அதன்படி இக்குழுவினர் நேற்று முன்தினம் அமைச்சரிடம் தமது சிபார்சுகளை சமர்ப்பித்தபோதே ஹக்கீம் இதனைத் தெரிவித்துள்ளார்.

கப்பல் மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதுபற்றி அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

இலங்கையில் மாலுமிகளுக்கான பயிற்சி நெறியில் 25ஆயிரம் பேர் பங்குபற்றிய போதும் அவர்களில் 11ஆயிரம் பேர் மாத்திரமே மாலுமிகளாக வேலை செய்யத் தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் வர்த்தக நோக்கிலான கப்பல் மாலுமிகளை பயிற்றுவிக்கும் பல்கலைக்கழகத்தை ஸ்தாபிக்கவும் செயலணியை உருவாக்கி சர்வதேச அங்கீகாரம்பெற்ற பயிற்சியை வழங்குவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்றார். (உ-10)

# காணி உரிமைச் சட்டமூலம் அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

காணியற்ற 12லட்சம் மக்கள் காணிச் சொந்தக்காரர்களாகும் உரிமையை வழங்கும் சட்டமூலத்திற்கு, அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதுபற்றி, காணி அமைச்சர் ராஜித சேனாரத்னா கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த 8மாத காலங்களாக இந்தச் சட்டமூலத்தை ஜனாதிபதி எதிர்த்து வந்திருந்த காரணத்தினால் இதனை அமைச்சரவை அங்கீகரிக்க பின்னடித்து விட்டது.

மேற்படி சட்டமூலத்தில் காணி விநியோகம் தொடர்பாக மாகாண சபைகளுக்கு வழங்கும் அதிகார ஏற்பாட்டிற்கே ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து ஜனாதிபதியின் செயலாளர் சட்டமா அதிபர், காணி அமைச்சின் செயலாளர் ஆகியோர் இணைந்து இது தொடர்பாக கூட்டு அறிக்கை ஒன்றை தயாரித்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் இவ்வறிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். அதைத் தொடர்ந்து அமைச்சரவையும் 12லட்சம் மக்கள் காணி உரிமையாளராகும் உரிமையை பெறும் சட்ட மூலத்திற்கு அங்கீகாரம் வழங்கியது.

இச்சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அத்துடன், இச்சட்டமூலத்தின் அடிப்படையில் காணிக்கண்காணிப்புக் குழுவிற்கு 5 அங்கத்தவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ் 5அங்கத்தவர்களில் இருவரை ஜனாதிபதி நியமிப்பார் என்றார்.

இதேவேளை காணி அமைச்சர் ராஜித சேனாரத்னா எதிர்பார்த்தது போல இருவரை இக் குழுவில் நியமிக்க ஜனாதிபதி பரிந்துரை வழங்க மாட்டார் என்றும் எவ்வாறாயினும் ஒருவர் மட்டுமே ஜனாதிபதியின் பரிந்துரையின் பேரில் நியமிக்கப்படுவார் எனவும் அமைச்சரவை வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. (உ-10)

(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## சித்த மருத்துவத்திற்கு.....

நிறுவனத்தின் ஏனைய அதிகாரங்கள் பின்வருமாறு,

※ நிறுவனத்திற்குரிய நியமனங்கள் வழங்குவது பற்றிய முழு உரிமையும் முகாமைத்துவ சபைக்கு இருக்கும். பேரவையின் அனுமதிக்காக விடயங்களை முகாமைத்துவசபை சிபார்சுசெய்யும். துணைவேந்தர் நிறுவனதத்தின் இறைமையை பேரவை அங்கத்தவர்களின் ஆலோசனையுடன் பாதுகாப்பார்.

※ மாணவர்களுக்கான விடுதி வசதிகள் மற்றும் உத்தியோகத்தரின் விடுதி வசதிகள், மாணவரின் ஒழுக்கம் பற்றி நிறுவனம் பொறுப்புடன் செயற்படும்.

※ மாணவர்கள் கடன் பெறுவதற்கு வசதியாக வங்கிகளுடன் தொடர்புகொண்டு நிறைவுசெய்தல் மற்றும் நிதிநிறுவனங்கள் மூலம் இதனை நிறைவேற்றுதல்.

※ சட்டங்களுக்கமைய சில கற்கை நெறிகளை வழங்குவதற்கான நிதி வசூலிக்கும் அதிகாரம் நிறுவனத்திற்குண்டு வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு விரிவுரையாளர் பரிமாற்றம், நிபுணதத்துவ சேவை மற்றும் பட்டப்பின் படிப்பு, பயிற்சி போன்றவற்றை ஒழுங்கு செய்யும் அதிகாரம் நிறுவனத்திற்குண்டு.

மற்றும் நிறுவனத்தின் அத்தியட்சகர் ஒரு முழுநேர உத்தியோகத்தவராவர். நிர்வாகக் கடமைகளையும், கல்விசார் நடவடிக்கைகளையும் தலைமை தாங்கி நடத்துவதுடன் நிறுவகத்தின் தலைவராகவும் சட்டப்பிரமாணங்களுக்கமைய செயற்படுவர். முகாமைத்துவ சபையின் தலைவராகவும் மற்றும் நிறுவனத்தினால் அமைக்கப்படும் உப குழுக்களுக்கும் தலைவராகவும சட்டப்பிரமாணங்களுக்கமைய செயற்படுவார். எந்தக் கூட்டங்களிலும் பங்குபற்றி பேசும் உரிமையுண்டு. நிறுவனத்தின் நிதிக்குப் பொறுப்பாக இருப்பார்.

நிறுவனத்தின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருப்பார்.

முகாமைத்துவ சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரியாகச் செயற்படுவார். முகாமைத்துவ சபையின் நம்பிக்கைக்கு பொறுப்பாக செயற்படுபவராகவும் இருப்பார்.

மேற்கூறப்பட்ட விடயங்களிலிருந்து நிறுவனம் ஒரு துறைசார் கல்வியை அதிக நிதிவளத்தினை பெறுவதன் மூலமாகவும், சுயாதீனமாக செயற்படுவதன் மூலமாகவும், பல அமைப்புகளுடன் எவ்வித தடையும் இன்றி நேரடித் தொடர்புகொள்வதன் மூலமாகவும், பல்கலைக் கழகத்திலிருந்து பிரிக்கப்படாது துணைவேந்தரின் அனுசரணையுடனும் மூதவை, பேரவையின் ஒப்புதலுடனும் செயற்படுவதன் மூலமாகவும் துரிதமாகவும், சுயாதீனமாகவும் அபிவிருத்தி என்னும் இலக்கை அடையக் கூடிய கட்டமைப்பாக அமையும் என்பதில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது.

ஒரு பல்கலைக்கழகத்தின் மூதவை, பேரவை தமக்குத் தேவையான பீடத்தையோ, நிறுவனத்தையோ அதற்குரிய நியாயத்தன்மையின் வரையறைக்குட்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கேட்கும் உரிமையுண்டு. ஆனால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தமது கொள்கையை அடிப்படையாகவைத்து (Policy)எந்த அமைப்புசிறந்தது என தீர்மானிக்கும் உரிமையையும், அதிகாரத்தையும் கொண்டுள்ளது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.



யாழ்.ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற கலவிக் கண்காட்சியை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம், பழைய மாணவர் வே.சிவசுந்தரம், பாடசாலை அதிபர் வே.பாலசுப்பிரமணியம், உப அதிபர் சி.திரிகரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: கோப்பாய் நிருபர்)



குமரக்கோட்ட சனசமூக நிலைய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடாத்தப்பட்ட கிரிக்கெற் போட்டி இறுதியாட் டத்தில் வெற்றியீட்டிய காந்தி அணியையே இப்படத்தில் காண்கின்றீர்கள்.



கரவெட்டிப்பிரதேச சபையால் நெல்லியடியில் 35இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நவீன மீன்சந்தைத் திறப்பு விழாவிற்குக் கரவெட்டிப்பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பசுபதி தலைமைதாங்கி உரை யாற்றுவதையும் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளா .ரீ.வீ.கிருஸ்ணசாமி அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: பரு. நிருபர்)

# விடுதலைப் புலிகளின் ஒவ்வோர் நகர்வையும்

# அமெரிக்கா உன்னிப்பாக அவதானிக்கிறது

## அந்நாட்டுத் தூதரகம் அறிக்கை

(கொழும்பு)

சமாதானம் மீதான நம்பிக்கையை சிதறடிக்கும் வகையில் விடுதலைப் புலிகளின் சில நடவடிக்கைகள் அமைந்துள்ளன என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத்தூதரகம் அண்மையில் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவ முகாம் ஒன்றை நடத்திவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் மாற்று அரசியல் வாதிகள் மற்றும் இராணுவ குற்றப் புலனாய்வு பிரிவில் உள்ளவர்களை படுகொலை செய்யும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். இதனால், சமாதான நடவடிக்கைகள் பாதிப்படையும் நிலை உருவாகியுள்ளது.

எனவே தீவிரவாதம், அரசியல் படுகொலைகள் என்பவற்றை விடுதலைப் புலிகள் முற்றாக கைவிட்டு யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு அமைவாக செயற்பட வேண்டும்.

அத்துடன், அரசிற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளும் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகளை விடுதலைப் புலிகள் தொடர்ந்து தீவிரமான ஆராய்ந்து வருகின்றபோதும் அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

அத்துடன், திருகோணமலை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் முகாமை அகற்றுமாறு கண்காணிப்புக்குழு கோரியுள்ளமையும் அமெரிக்கா தீவிர கவனத்தில் எடுத்துள்ளது என்றுள்ளது. (உ-10)

# மதமாற்றத்திற்கு நிர்ப்பந்திப்போரை

# தண்டிக்க ஏதுவாக அமைச்சரவைப் பத்திரம்

## தாக்கல்செய்ய நீதிஅமைச்சர் முடிவு

(கொழும்பு)

சுய விருப்பமிலலாமல் ஒருவரை அவரது மதத்திலிருந்து விலக்கி மாற்று மதத்தை பின்பற்ற நிர்ப்பந்திப்பது சட்டவிரோதமானது. இதனை சமீபத்திய நீதிமன்றத் தீர்ப்பு நிரூபித்திருக்கிறது.

இவ்வாறு நீதி அமைச்சர் டபிள்யூ ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற சபை முதல்வர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மதமாற்றத்தை நிர்ப்பந்திப்பது சட்டவிரோதமானது என கடந்த மாதம் 25ஆம் திகதி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இத்தீர்ப்பை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்யவுள்ளேன்.

இதன் பிரகாரம் தார்மீகத்திற்கு அப்பாற்பட்டு மதமாற்றம் செய்யத் தூண்டுவோருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு கிடைக்கும்.

வறிய மக்களுக்கு பணம் வழங்கி மதமாற்றத்தைத் தூண்டும் தனிநபர்கள் அல்லது குழுக்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

இதனால் இந்து, பௌத்த சமயங்களே பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கின்றன. அரசியல் யாப்பின் பிரமாணங்களுக்கமைய மதச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்றாலும் மத மாற்றத்திற்கான தூண்டுதல்கள் அனுமதிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.(த)

## சமுர்த்தி உத்தியோகத்தருக்கு

# வவுனியாவில் மூன்று நாள் பயிற்சி

(யாழ்ப்பாணம்)


சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி நெறி இம்மாதம் 'வவுனியாவில் நடைபெறவுள்ளது.

நாளை தொடக்கம் எதிர்வரும்

## ஆஞ்சநேயர் ஆலயச் சூழலில் உள்ள

# நல்லூரான் திருவடிக்கு

## (இன்று ஆறாம் திருவிழா)



## புகழ் பாடித் துதிப்போம்

பல்லவி

நல்லைந கர்வளர் கந்தன்பு கழினை

சொல்லியே நாம்பாடி துதிப்போ மடி–திரு

அனுபல்லவி

அல்லிவி ழிவள்ளி தெய்வயா னையுடன்

உல்லாச மாய்வரும் காந்தனை சேந்தனை

சரணம்

பொல்லாவி னைபோக்கி புனிதராக் கிஎம்மை

வெல்லும்வ ழிகாண விரைந்திடு வோம்

செல்லப்பன் யோகசுவாமி சித்தரெல் லாம்வணங்கி

பல்லாயி ரந்தடவை போற்றி முத்திபெற்ற

– எஸ்.சிவானந்தராஜா

# எமையென்றும்காப்பவன்

மேலும் கூறுகையில்,

மதமாற்றத்தை நிர்ப்பந்திப்பது சட்டவிரோதமானது என கடந்த மாதம் 25ஆம் திகதி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இத் தீர்ப்பை மேலும் வலுப்படுத்தும்

## வவுனியாவில் மூன்று நாள் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சமூர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமூர்த்தி முகாமையாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி நெறி இம்மாதம் வவுனியாவில் நடைபெறவுள்ளது.

நாளை தொடக்கம் எதிர்வரும் 12ம்திகதிவரையான காலப்பகுதியில் வவுனியா விவசாய பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறியில் யாழ்.மாவட்டத்தில் இருந்து 85வரையானோர் பங்கேற்கவுள்ளனர்.

சமூர்த்தி அபிவிருத்தி அதிகார சபை ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் தொழில் தரத்தை மேம்படுத்துவதற்குரிய பல பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (உ-4)

### ஆஞ்சநேயர் ஆலயச் சூழலில் உள்ள

## கள்ளுத் தவறணையை அகற்றக் கோரிக்கை

(இணுவில்)

மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்திற்கு பின்புறத்திலுள்ள வி.சி.லேனில் அமைந்துள்ள கள்ளுத்தவறணையை அவ்விடத்தில் இருந்து அகற்றுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் குடியிருப்புக்கள் பல அப்பகுதியில் அமைந்திருப்பதால் இக் கள்ளுத் தவறணை அவ்விடத்திற்குப் பொருத்தமற்றது என்பதால் அதனை அப்புறப்படுத்துமாறு உதவி அரசாங்க அதிபர் கிராமசேவையாளர் ஆகியோருக்கு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். (உ-96)

## பிரி.விசா நடைமுறை குறித்து சபையில் காரசாரமான விவாதம்

(கொழும்பு)

பிரிட்டனுக்கான விசா அனுமதி பெறும் இலங்கையர்களின் விரல் அடையாளங்களைப் பதிவு செய்வதற்குரிய தீர்மானம் இலங்கை மக்களின் சுய கௌரவத்திற்கு ஏற்பட்ட இழுக்காகும் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக நேற்றுப் பாராளுமன்றில் விசேட அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றிய அவர்,

குற்றவாளிகளைக் கைது செய்யும் போதுதான், விரல் அடையாளம் பதிவு செய்யப்படவேண்டும். ஒரு நாட்டிற்குப் பிரவேசிப்பதற்காக விரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் நடைமுறை உலகின் எந்தப்பாகத்திலும் இல்லை.

எனவே குறித்த நாட்டில் இருந்து இலங்கைக்கு வருவோரது விரல் அடையாளங்களையும் பெற வேண்டும் என்றார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய நீதி அமைச்சர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார,

ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இவ்வாறு குறிப்பிடுவது தவறு ஏனெனில், அக் கட்சியின் தலைவர் குறித்த நாட்டில் பிரஜாவுரிமை பெற்றவர் என்றார்.

இதற்கிடையில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் தாய்லாந்துப் பிரதமர் தக்ஸின் சின்னவத்ராவின் வருகை தொடர்பாகப் பாராளுமன்ற ஆரம்ப நிகழ்வில் சபாநாயகர்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்தார்.

இன்னும் சில தினங்களில் இலங்கைக்கு வரவிருக்கும் தாய்லாந்துப் பிரதமர் எதிர்வரும்15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாகவும் சபாநாயகர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார். (உ-10)

## இலஞ்ச ஊழல் விசாரணை ஆ.கு.வின் பணிகளை முன்னெடுப்பதில் தடங்கல்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் ஆணையாளர் வெற்றிடத்தை நிரப்பும் வரையில் முறைப்பாடுகளை விசாரிக்கும் சட்டபூர்வமான அதிகாரம் இக் குழுவிற்குக் கிடையாது என ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதுபற்றி இலஞ்சஊழல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் பியசேன ரணதுங்கா கருத்து வெளியிடுகையில், ஆணைக் குழுவின் 3ஆணையாளர்களும் செயற்படவேண்டும். ஆனால், ஒரு ஆணையாளருக்கான பதவி கடந்த பெப்ரவரி மாதம்முதல் வெற்றிடமாக உள்ளது.

இது ஆணைக்குழுவின் பணிகளுக்கு பெரும் முட்டுக்கட்டையாகவே இருக்கிறது.

இத்தகைய குறைபாடுகள் இருந்த போதிலும் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை சமர்ப்பிக்க பின்நிற்க வேண்டாம்.

ஏனெனில் வெற்றிடமாக இருக்கும் ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டதும் ஆணைக்குழு தனது பணிகளை உடனடியாக ஆரம்பிக்கும். அப்போது பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளும் உடன் ஆரம்பிக்கப்படும் என்றார். (உ-10)

செல்லப்பன் யோகசுவாமி சித்தவேல் லாம்வணங்கி
பல்லாயி ரந்தடவை போற்றி முத்திபெற்ற

- எஸ்.சிவானந்தராஜா

---

## எமையென்றும்காப்பவன்

தந்தைக்கு மந்திரம் சொன்னவன்
தமிழிற்கோர் தெய்வமாய் வந்தவன்
சிந்தையில் வைத்தே துதிப்பவர்க்கெல்லாம்
சீரான வாழ்வினை அளிப்பவன்
முந்தைய வினைகள் அறுப்பவன்
மூவிரு முகங்கள் கொண்டவன்
கந்தனே! எம்மையென்றும் காப்பவன்
கரங்குவித்தே அவனருள் வேண்டுவோம்.

- மு.முத்துக்குமார்.

---

## வேண்டும் வரந்தருவாய்!

எடுப்பு

வேண்டும் வரந்தருவாய் முருகையா– எந்தன்
வேதனையைத் தீர்த்திட வேண்டும் வரந்தருவாய்

தொடுப்பு

வண்ண மயிலோடு வருவாய் வேலையா–உந்தன்
வேலெடுத்து வினை தீர வேண்டும் வரந்தருவாய்

முடிப்பு

எண்ணத்தில் நிலையாகும் எழில்வேலா–எங்கள்
மண்ணுக்கு மைந்தனாகி மால்மருகா முருகா
விண்ணுக்குள் ஒளிதந்து வித்தாகும் சுடர் ஒளியே
கண்களிலே கருணைகொண்டு காட்சிதருவாய் கதிர் வேலவா!

- என்.பிறேமசீலன்-

---

## கந்தா உமைத் தொழுகிறோம்!

நல்லைத திருப்பதி அமைந்தவனே கந்தா
நாதனுக்கு உபதேசம் செய்தவனே மைந்தா
சகதி வேல் எடுத்தாயே சரவணா-உன்
சந்நிதி வந்து தொழுகின்றோம் நாம்
தேவர்களைக் காத்திடவே சூரனை அழித்தாயே
மக்கள் பிணி தீத்திடவே நல்லைப்பதி அமைந்தாயே
யாம்மிருக்க பயம் ஏன் என்று உன் வேல் சொல்லிடவே
எங்கள் குறை தீர்த்திட ஏறிமயில் வருவாயே

- சி.சிவசெந்தூரன்- வேலணை

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.


## வெள்ளி முற்றம்

# உன்னை நினைத்து

ரமேஸ்... ரமேஸ் எழும்படா, பாடசாலைக்கு போகவேண்டும் அல்லவா? கெதியாய் எழும்பு எனத் தனது தம்பியான ரமேஸை எழுப்பினாள் மேனகா. ரமேஸும் தனது காலைக் கடன்களை முடித்துவிட்டுப பாடசாலை செல்ல ஆயத்தமானான். செல்லும்போது ''ரமேஸ் நன்றாக படிக்கவேண்டும். நல்ல பிள்ளையாக வாழவேண்டும்'' என வழியனுப்பி விட்டாள் மேனகா. அப்போது தான் ரமேஸ் ஐந்தாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்தான். ஆதலினால் புலமைப்பரிசில் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. எனவே தான் மேனகா தம்பி மீது கூடிய கவனம் செலுத்தினாள்.

பாடசாலையில் முதலாவது பாடம ஆரம்பிப்பதற்கான மணி ஒலித்தது. ஐந்தாம் ஆண்டிற்கு தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர் கந்தையா ஐந்தாம் ஆண்டைச் சேர்ந்ததும் மாணவர்கள் அனைவரும் எழுந்து நின்று ''குட்மோனிங் சேர்'' என்றனர். ஆசிரியர் கந்தையாவும் '' குட்மோனிங் பிளளைகளே'' என்று கூறி தனது ஆசனத்தில் அமர்ந்தவர் ''பிள்ளைகளே! நான் நேற்று வைத்த தமிழ்ப் பாடப் பரீட்சையின் முடிவுகளை இப்போது தரப்போகிறேன். நீங்கள் ஒவ்வொருவராக வந்து உங்களது விடைத்தாளைப் பெற்றுக் கொள்ளவும் எனக்கூறிய பின், ரவி... ஜீவா... கமலம்.... றெனோட.... எனறவாறு அழைத்தவர் ரமேஸ் பூச்சியம் என்றவுடன அனைத்து மாணவர்களும் சிரிததனர். ஆனால் ரமேஸுக்கோ இது ஒரு பேரிடியாக இருந்தது. மாணவர்கள் ரமேஸை கேலியாகப் பேசினார்கள. ஒருவன் மற்றவனுக்கு ''அடேய சுதாகர் ரமேஸுக்கும் எண்ணந்தான் தான் ஒரு பெரிய படிப்பாளி என்று. இவளவு நாளும் யாருடையதைப் பார்த்து எழுதினானோ யாருக்குத் தெரியும்'' என்றான். அடக்கடவுளே இப்படியா நீ என்னைச் சோதிக்க வேண்டும் என மனத்திற்குள் அழுதான் ரமேஸ். ஆனால் ஒருவன் மட்டும் '' ரமேஸ் அப்படி எடுத் திருக்க முடியாது. எங்களது வகுப்பிலே கெட்டிக்காரன் என்றால் அது ரமேஸே தான். அப்படி

...றான் இவன் உங்களை விடக் கூடுதலான புள்ளிகளைப் பெற்று... '' என்று கூறிக்கொண்டு செல்லும்போதே ரமேஸினுடைய போன உயிர் மீண்டும் அவனது உடலை எட்டியது. ரமேஸைக் கேலி செய்தவர்களினது கண்களெல்லாம் சூரியனைக்கண்ட பூக்கள் போல் விரியத்தொடங்கியது. ஆனால் அங்கு மேனகாவின் வீட்டில்:-



✦ ✦ ✦

தம்பி ரமேஸ் பாடசாலையால் வட்டிற்கு வரப்போகிறானே என்று அவசர அவசரமாக சமையல் வேலையில் ஈடுபட்டாள் மேனகா. அப்போது வட்டின் முன் வாசலில் நின்ற படியே மேனகா...... பிள்ள மேனகா என அழைத்தார் வேலுச்சாமி. அவரது அழைப்பைக்கேட்ட மேனகாவும்

...வாழ்க்கை மீது பாரிய குண்டு விழுநதது போல் ஆயிற்று. இதனைக் குணப்படுத்துவது என்றால் வெளிநாட்டிலுள்ள வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுங்கள் இல்லையேல் இந்நோய் குணமாகாது என்று பல வைத்தியர்கள் கூறினார்கள். எனினும் அப்படி வெளிநாட்டு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்

...சொல்கிறதும் சரி தான்..... ஆனால் ........என்னுடைய குடும்பத்தி லுள்ளவர்களோ.......... அந்தப் பணத்தை வாங்கி வாருங்கள் ........ வாங்கி வாருங்கள் என நெருக்குகிறார்கள். நான் யாருக்காகப்பாடுபட.......'' எனக் கேட்டார் வேலுச்சாமி.'' சரி அண்ண என்னுடைய தம்பி ரமேஸ் இந்த வருடம் புலமைப்பரீட்சை எடுக்கிறான் அத...

...எல்லாம் உதவி செய்தவர். ஆனால் அதைப்பொறுக்காத இறைவனால் முதலில் எனக்கு நோய் ஏற்பட்டது. அதன் பிறகு அம்மாவுக்கு, தம்பிக்கு என்று மாறி மாறி நோய்கள் வர ஆரம்பித்தது. அப்படியிருந்தும் எமது வாழ்க்கை சில நாட்கள் வரை கழிந்தோடியது. ஆனால் துரதிஷ்ட வசமாக எமது அப்பாவுக்கு நோய் ஏற்பட்டது. அதனால் இனிமையான

விடலாம் என்று, ஆனால் விதியோ வேறொன்றைச் செய்தது. அதாவது எமது அப்பாவை எம்மோடு இருக்க விடாது பிரித்தது. இத்தனையும் நடந்து ஒரு மாதம் ஆகும் முன்பே அப்பாவின் கவலையால் துவண்டிருந்த எமக்கு இடி வந்து தலையில் விழுந்ததைப் போல் ஒரு நிலை தோன்றியது. அதாவது எம்மோடு கூட இருந்த அம்மாவும் எம்மை விட்டுப்பிரிந்துவிட்டார். இப்போது நானும் ,தம்பியும் தனித்து விட்டோம். ஆனாலும் தம்பியினது வாழ்வு என்றாலும் சிறக்கவேணும் என்று தம்பியைப் படிக்க விட்டிருக்கிறேன். நான் இங்கு சமைத்து விட்டு ஓய்வு நேரங்களில் எனதுதையல் இயந்திரத்தினால் பலருக்கு ஆடை தைத்துக்கொடுத்து அதனால் வரும் அற்ப தொகையைக் கொண்டே எமது வாழ்க்கை நடக்கிறது. நான் என்ணண்ண செய்ய ........ ''என அழுத குரலில் கேட்டாள் மேனகா. ''நீ


தனது மனதினுள் ''எப்படியும் நாளைக்குத் தெரிய வரும்'' என எண்ணினாள். வேலுச்சாமி அந்த இடத்தை விட்டு நகரவும், பாடசாலையிலிருந்து ரமேஸ் வீட்டை யடையவும் சரியாக இருந்தது. மேனகா ரமேஸுக்கு உணவு பரிமாறி விட்டு தானும் சாப்பிட்டவுடன் தையலை மேற்கொண்டாள். இவ்வாறே அன்றைய பொழுது கழிந்தது.

✦ ✦ ✦

மறு நாட் காலை ரமேஸை பாடசாலைக்கு அனுப்பிவிட்டுத் தாய், தந்தை, தம்பி என்போரின் படங்களைப் பார்த்து கண்ணீர் விட்ட பின் ஓரிடத்தில் அமர்ந்து நஞ்சு மருத்தினது மூடியைத் திறந்து வாயருகே கொண்டு செல்லும்போது '' அ.....க் ....கா.... என்ற குரலைக்கேட்டுத் திரும்பியவள் ரமேஸைக்கண்டதும் நஞ்சு மருந்தை மறைத்து விட்டு என்னடா ரமேஸ் பாடசாலைக்குப் போகவில்லையா என்றாள் மேனகா. இல்லை அக்கா இன்று ஏதோ விடுமுறையாம் என்றவன் ''அக்கா என்ன இது உனக்குப் பக்கத்தில மருந்துப் போத்தல் ஏன் இதெல்லாம் எனக்கும் கொஞ்சம் தருகிறாயா.......? நானும் அப்பா, அம்மாவைப் பார்க்க ஆசையாகவுளளது'' என்றான் ரமேஸ்.''சீ இப்படியெல்லாம கதைக்காத ........ நான் இருக்கிறேன்...... உன்னைப் பார்ப்பதற்கு என்றாள் மேனகா'' நீயா? என்னைப் பார்ப்பதற்கு இன்று நான் பாடசாலையில் இந்நேரம் நின்றிருந்தால் நீ இப்போது மேலுலகம் சென்றிருப்பாய். பின்பு ...... நான் .............''என்று அழுத படி கூறினான் ரமேஸ். ''அப்படி ஒன்றும் நடக்காது! ஏதோ என்னில் வந்த அறியாமையால் இவ்வாறு நடக்கப் பார்த்தேன் என்றாலும் அது இறைவனின் உதவியால் காப்பாற்றப்பட்டுள் ளேன்.

நடராசா
கண்ணதாசன்

எனினும் அந்த நஞ்சு மருந்தைக் குடிப்போம் என்று நினைத்தேன் அப்போது உனது குரலைக்கேட்ட



தான் ஒரு பெரிய படிப்பாளி என்று. இவ்வளவு நாளும் யாருடையதைப் பார்த்து எழுதினானோ யாருக்குத் தெரியும்" என்றான். அடக்கடவுளே இப்படியா நீ என்னைச் சோதிக்க வேண்டும் என மனத்திற்குள் அழுதான் ரமேஸ். ஆனால் ஒருவன் மட்டும் " ரமேஸ் அப்படி எடுத் திருக்க முடியாது. எங்களது வகுப்பிலே கெட்டிக்காரன் என்றால் அது ரமேஸே தான். அப்படியிருக்கும் போது ரமேஸ........" என்று எண்ணிய படி ரமேஸை தேற்றினான். அவன் வேறு யாருமல்ல ரமேஸினுடைய உயிர் நண்பன் கரன். இவ்வாறு நடந்து கொண்டிருக்கும் போது, ஆசிரியர் கந்தையா "பிள்ளைகளே இங்கு தவறு ஒன்று நேர்ந்து விட்டது. ராஜேஸ் என்ற பெயரை நான தவறுதலாக ரமேஸ் எனக் கூறி விட்டேன். ரமேஸ் என்ற மாணவன் நூற்றுக்கு நூறு புள்ளியைப் பெற்றிருக்கின்

✦ ✦ ✦

தம்பி ரமேஸ் பாடசாலையால் வட்டிற்கு வரப்போகிறானே என்று அவசர அவசரமாக சமையல் வேலையில் ஈடுபட்டாள் மேனகா. அப்போது வட்டின் முன் வாசலில் நின்ற படியே மேனகா...... பிள்ள மேனகா என அழைத்தார் வேலுச்சாமி. அவரது அழைப்பைக்கேட்ட மேனகாவும் அவர் அருகில் சென்று என்னண்ண விசயம்....... என வினாவினாள். எனன விசயமோ .........? உங்கப்பன் வாங்கின கடனைத் திருப்பித்தருகிற யோசனை இல்லையாக்கும் என்று கோபமாகக் கேட்டார் வேலுச்சாமி. "என்னண்ண நாங்கள் செய்கிறது சற்று யோசனை பண்ணிப்பாருங்கோ. எங்கட அப்பாவும் ஒரு காலத்தில பணக்காரராகத்தான் இருந்தவர். அப்போதெல்லாம் ஏழை எளியவருக்கு

வாழ்க்கை மீது பாரிய குண்டு விழுந்தது போல் ஆயிற்று. இதனைக் குணப்படுத்துவது என்றால் வெளிநாட்டிலுள்ள வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுங்கள் இல்லையேல் இந்நோய் குணமாகாது என்று பல வைத்தியர்கள் கூறினார்கள். எனினும் அப்படி வெளிநாட்டு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு எம்மிடம் பணமுமில்லை. அதனால் எமது கிராமத்திலுள்ள வைத்தியசாலையில் வைத்திருந்தோம். அப்பாவினுடையதும் , எங்களது உணவுத்தேவைக்காகவும் உங்களிடம் சிறு தொகைப்பணம் வாங்கியிருந்தோம். அதனை நான் மறக்க வில்லை. நாங்கள் நினைத்தது அப்பாவினுடைய நோய் குணமாகியவுடன் அப்பாவும் வேலைக்குச் செல்வார். அப்போது திருப்பித்தந்து

சொல்கிறதும் சரி தான்..... ஆனால் ........என்னுடைய குடும்பத்தி லுள்ளவர்களோ.......... அந்தப் பணத்தை வாங்கி வாருங்கள் ........ வாங்கி வாருங்கள் என நெருக்குகிறார்கள். நான் யாருக்காகப்பாடுபட......." எனக் கேட்டார் வேலுச்சாமி." சரி அண்ண என்னுடைய தம்பி ரமேஸ் இந்த வருடம் புலமைப்பரீட்சை எடுக்கிறான் அதனால அவன் அதில் கட்டாயம் கூடிய புள்ளிகளைப் பெறுவான். அப்போது அரசாங்கம் அவனுக்கு மாதம் மாதம பணம் கொடுபடும் அதனைத் தருகிறேன் என்றாள் மேனகா. அதொன்றும் சரிவராது. அதுவரைக்கும் என்னைப் பொறுத்திருக்கச் சொல்கிறாயா...? நாளைக்குப் பின்னேரத்திற்குள் திருப்பிப் பணம் தந்திடனும் இல்லையென்றால் பெரிய பிரச்சினை வரும்." என்று கூறும்போதே, மேனகா

நடராசா கண்ணதாசன்

எனினும் அந்த நஞ்சு மருந்தைக் குடிப்போம் என்று நினைத்தேன் அப்போது உனது குரலைக்கேட்டவுடன் உனது வாழ்வு மண்குடிசை போல் ஆகிவிடுமோ......?என்றும் எண்ணினேன். அதனால "உன்னை நினைத்து" உனது வாழ்வை நினைத்து குடிக்கவில்லை....... என்று கூறும் போது ரமேஸினுடைய கண்களிலிருந்து இரு சொட்டுக்கண்ணீர்த்துளி முகத்தில் வழிந்தோடியது.

✦ முற்றும் ✦

(யாவும்கற்பனை)

# தமிழர்களை அடையாளப்படுத்துவதாக அவர்தம் பெயர்களும் அமைய வேண்டும்

## தமிழ்ப் பெயர்க் கையேடு வெளியீட்டில் தமிழேந்தி

(மருதங்கேணி)

நாம் எங்களுடைய விடுதலைப் போராட்டப் பணிக்கிடையே இந்த தமிழ்ப் பெயர்க் கையேடு நூல் வெளியீட்டையும செய்திருக்கிறோம். தமிழ் அறிஞர்கள் பலர் முன்வருவார்களானால் இப்படிப் பல நூல்களை வெளியிடலாம்.

இவ்வாறு தமிழ் பெயர் கையேடு நூல் வெளியீட்டு விழாவில் தலைமை வகித்துப் பேசிய தமிழீழ நிதிப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்ப் பெயர் கையேடு நூல் வெளியீட்டு விழா அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைக்க, தேசியக் கொடி வணக்கத்தை வன்னிக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஞானம் செலுத்தினார்.

தொடர்ந்து பொதுச் சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.அரியரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழேந்தி அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

தமிழ் மக்கள் அனைவரும் தமது பெயர்களை தமிழிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கிலேயே நாம் இந்த தமிழ்ப் பெயர்க் கையேட்டை வெளியிடுகின்றொம். தமிழ் பெயர் கையேடு ஒன்றை 1992ஆம் ஆண்டு மிகவும் சிறியதாக குறைந்த பெயர்களுடன் எமது தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டது.

அதன்பின், பெருந்தொகையான பெயர்களுடன் நிறைவான ஒரு நூலை வெளியிட வேண்டுமென நாங்கள் விரும்பினோம். எல்லாத் தமிழர்களும் தமிழிலேயே பெயர்களை வைத்துக்கொள்ள வேண்டும என்ற எங்களது விருப்பத்தின் வெளிப்பாடாக அந்த நூலைக் கொண்டுவர விரும்பினோம்.

மேல் நாட்டவர்களைப் பொறுத்தவரை அவர்களின் பெயரை வைத்தே அவர்கள் யாரென்பதைக் கண்டு படிக்க முடியும். ஆனால் எங்களைப் பொறுத்தவரை அது முடியாத காரியமாக இருக்கிறது.

இந்நிலை ஓரளவாவது மாறி எம்மவருடைய பெயரை வைத்து இவர் தமிழர் என்பதை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒரு நூலை வெளியிட வேண்டுமென விரும்பினோம்.

யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின், இந்நூலை எப்படி ஆக்குவது என எண்ணி அதனுடைய தொடக்க முயற்சிகளை மேற்கொண்டோம். பின்னர் வன்னிக்கு இடம்பெயர்ந்து வந்த பேராசிரியர் சண்முகதாஸ் அவரது துணைவியார் மனோன்மணி சண்முகதாஸ், பண்டிதர் பரந்தாமன் இளங்குமரன் ஆகியோருடன் இணைந்து நாம் இந்த முயற்சியைத் தொடங்கினோம்.

இந்நூல் 46,000 பெயர்களைக் கொண்டதாக வெளிவந்துள்ளது. 1992ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இம் முயற்சி 2003ஆம் ஆண்டு ஓரளவு நிறைவு பெற்றுள்ளது என்றார்.

(பி-35)

# "மெல்லக் கற்போர்" திட்டத்திற்கு மாணவர் மத்தியில் வரவேற்பு

## நேற்றைய கலந்துரையாடலில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மெல்லக் கற்போரின் வளர்ச்சி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுக்காலை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாகாணக் கல்வித் திணைக்களத் திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர் மகேந்திரம், யுனிசெவ் யாழ். அலுவலக அதிகாரி எஸ். சிறில்கந்தராஜா, வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வி.ரி. செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது,தரம் 6இல் பாடசாலைகளில் கல்வி கற்கும் கல்வி நிலையில் பின்தங்கிய மாணவர்களுக்காக "யுனிசெவ்" நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள " மெல்லக்கற்போர்" திட்டத்தின் வளர்ச்சி குறித்துக் கலந்தாலோசிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் தரம் 6ல் பின் தங்கிய நிலையிலுள்ள மாணவர்களுக்குச் சிறப்பான முறையில் தமிழ்,கணிதம்,ஆகிய பாடங்கள் மீட்டற் கல்வி மூலம் கற்பிக்கப்படுகின்றன. இக்கல்வி முறைக்கு மாணவர்,பெற்றோர் மத்தியில் பலத்த வரவேற்புக் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்,பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள்மற்றும் பலர் மனமகிழ்வுடன் ஒன்றுபட்டு ஏற்றுக்கொண்டுள்ள இம் மெல்லக் கற்போருக்கான திட்டத்தின் பயன்பாடு, நிலை, தரம் பற்றிய விபரங்கள் யுனிசெவ் நிறுவனத்தின் தலைமைச் செயலகத்திற்கு அனுப்பப்படவுள்ளன.

அதேவேளை, இத்திட்டத்தை இனி வரும் காலங்களில் மேன் மேலும சிறப்புற நடாத்துவதற்கான பல விரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதும் குறிபபிடத்தக்கது. (உ-7)

## வலதுகுறைந்தோருக்கு முச்சக்கர வண்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலது குறைந்தோருக்கான முச்சக்கர சைக்கிள் வண்டிகள் வழங்கும் நிகழ்வு இன்று பி.ப.3.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

லயன். என்.ஜெயரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (த)

# சித்த மருத்துவத்திற்கு உகந்த அமைப்பு முறையை அத்துறை அபிமானிகள் தீர்மானிக்க வேண்டும்

**பல்கலைக்கழகத்தில் பீடம், நிறுவனம் ஆகிய இரண்டு கட்டமைப்புக்களின் செயற்பாடுகள் பற்றிய ஓர் யதார்த்தமான கண்ணோட்டம்.**

**பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி**
(சித்தமருத்துவத்துறை)

இலங்கையில் 13 பல்கலைக்கழகங்களும் 8 நிறுவனங்களும் மற்றும் பல்கலைக்கழக கல்லூரிகளும் உயர் கல்வியில் பங்குகொள்கின்றன. ஆரம்பத்தில் இலங்கைப் பல்கலைக் கழகம் என்ற ஒரு பல்கலைக்கழகமே இருந்தது. ஆயினும் அவற்றின் கீழ் கொழும்பு வளாகம் (Campus) பேராதனை வளாகம், யாழ்ப்பாண வளாகம் போன்ற வளாகங்கள் அமைந்திருந்தன. 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்கப் பல்கலைக்கழக சட்டத்தின் பிரகாரம் பல பல்கலைக்கழகங்கள் அமைவதற்கான வாய்ப்புக் கிட்டியது. அதேபோல பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களும் அமைக் கப்பட்டன. பல்கலைக்கழக 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்கச் சட்டத்தில் காலத்திற்குக் காலம் திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டு சில பிரமாணங்கள் (Amendments) இணைக்கப்பட்டுள்ளன.

ஒரு பல்கலைக்கழகம் தனது தேவைக்கேற்பவும், மாணவர் தொகைக்கேற்பவும், அடிப்படை வசதிகளுக் கமையவும் பல பீடங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அனுமதியுடன் அமைக்கின்றன. அதேபோல் ஒவ்வொரு துறை (Department) அமைவதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அதன் நியாயத் தன்மையை ஒவ்வொரு பீடமும் விதந்துரைக்க வேண்டும். அதனைப் பரிசீலித்த பின்னர் தான் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அவற்றிற்கான அனுமதியை வழங்கும்.

நிறுவனம் என்பது பல்கலைக் கழகத்துடன் இணைக் கப்பட்டுள்ள ஒரு கல்விக் கூடமாகும். நிறுவனம் என்பது சில விசேட தன்மைகள் உள்ள கற்கை நெறிகளை தனித்து வளரச் செய்வதற்கு உரிய அலகாகும். இது பல்கலைக்கழக சட்டப் பிரமாணங்களுக்கமைய அமைக்கப்படும். இதனை நிர்வகிக்க ஒரு முகாமைத்துவ சபை அமைக்கப்படும். அதன் தலைவராக நிறுவனத்தின் அத்தியட்சகர் இருப்பார். அதன் முகாமைத்துவ சபை அங்கத்தவர்களாக குறிப்பிட்ட நிறுவனத்தின் கல்விசார் நடவடிக்கையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவர். இங்கு நிறுவனத்தின் கல்விசார் நடவடிக்கைகளும் நிர்வாக நடவடிக்கைகளுமே மேற்கொள்ளப்படும்.

இன்றைய நிலையில் கொழும்பு, களனி, பேராதெனியப் பல்கலைக்கழகங்களுடன் சில நிறுவனங்கள் அமைக் கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தில் இது வரை பல்கலைக்கழகத்துடன் இணைந்த நிறுவனங்கள் அமைக்கப்படவில்லை. இதனால் யாழ். பல்கலைக்கழக கல்விமான்களுக்கும், ஏனைய கல்விசார் அறிஞர்கட்கும், மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் 'நிறுவனம்' என்றால் என்ன என்பது புரியாத புதிராகவே இருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் இது சம்பந்தமான ஒரு தெளிவான நிலையை மக்களினது நன்மை கருதி விளக்க வேண்டியது எனது தார்மீகக் கடமை என்பதை நான் உணர்கின்றேன். சமூ கமும், கல்வி மான்களும் 'நிறுவனம்' பற்றிய தவறான கருத்துக்களை வைத்து பிழையான முடிவுகளுக்கு வரக் கூடாது.

நிறுவனம் என்பது எதுவித கட்டுப்பாடும் இன்றி சுயமாக துணைவேந்தரின் கீழ் இயங்கும். நிறுவனத்தின் 'முகாமைத்துவசபை' கல்விசார் மற்றும் நிர்வாகக் கட மைகளை மேற்கொள்ளும் கல்விசார் நடவடிக்கைகள் குறிப்பிட்ட துறையை முன்னேற்றுவதாகவே அமையும். இதற்குரிய நிதி நேரடியாகத் திறைசேரியிலிருந்து வழங் கப்படும். நியமனங்கள், பதவி உயர்வுகள், பதவி நீக்கம், கட்டடங்கள் அமைத்தல், காணி சுவீகரித்தல் போன்றவற்றை செயற்படுத்துதல். வேறு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பட்டப்பின் படிப்பு, ஆரோக்கிய சாலைப் பயிற்சி, மூலிகைப் பரம்பலை இனங்காணல், தரமான மருந்துகள் தயாரித்தல், பாரம்பரிய விசேட சிகிச்சை முறைகள், உணவு முறைகள், வாழ்க்கை முறை இவற்றை முன்னேற்றுவதற் கான செயற்பாடுகளை முகாமைத்துவ சபை செய்யும். மாணவர்களின் கல்வி சம்பந்தமான அடிப்படை வசதிகள், கட்டடங்கள், உபகரணங்கள், தளபாடங்கள் போன்றவற்றை அமைத்துக் கொடுத்தல். விரிவுரையாளர்களின் தராதரத்தை உயர்த்துவதற்கு பட்டப்பின்படிப்பு, நிர்வாகப் பயிற்சி, குறுகிய காலப் புலமைப்பரிசில் பயிற்சி நெறி இவற்றை ஒழுங்கு செய்தல் ஆகியவற்றைச் செயற்படுத்தும்.

நிறுவனத்தின் நிர்வாகக் கடமைகளுக்காக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், சிரேஷ்ட உதவி நிதியாளர் போன்ற பல உத்தியோகத்தர்களை நியமித்தல். மாணவர்களை கற்கை நெறிக்கு அனுமதிக்கும் தராதரங்களைத் தீர்மானித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மூலமாக மாணவரைச் சேர்த்துக்கொள்ளுதல். கற்கை நெறிக்கான பாடத்திட்டத்தை உருவாக்குதல், பல்கலைக்கழக மூலமாக கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கான பட்டமானிப் பட்டங்களை பல்கலைக்கழகம் மூலம் வழங்குதல் ஆகியவற்றை நிறுவனம் சுயமாக செய்யும். சில விடயங்களை மூதவை, பேரவைக்கு விதந்துரைக்கும் உரிமை முகாமைத்துவ சபைக்கு உண்டு. அதாவது பட்டம் வழங்குதல், பாடத் திட்டம், பரீட்சைகள் சம்பந்தமாக இவை அமையும். கொழும்பு பல்கலைக் கழகத்தின்கீழ் 1977ஆம் ஆண்டுமுதல் உள்நாட்டு மருத்துவ நிறுவனமும் அண்மையில் களனிப் பல்கலைக்கழகத்தின் கீழ் கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுள்வேத நிறுவனமும் செயற்பட்டு வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது. எந்தப் பல்கலைக்கழகத்தின் கீழும் சுதேச மருத்துவத்துறைக்குப் பீடம் இதுவரை அமைக்கப்படவில்லை.

**ஒரு பீடம் அமைதல் சிறந்ததா நிறுவனம் அமைவது சிறந்ததா என்பதை சற்று ஆராய்வோம்**

| இல | | பீடம் | நிறுவனம் |
|---|---|---|---|
| 01. | மாணவரை அனுமதித்தல் | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தீர்மானிக்கும். | மாணவர்களை நிறுவனம் தகுதிக்கேற்ப நேர்முகப் பரீட்சை/எழுத்துப் பரீட்சை மூலமோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு மூலமாகவோ அனுமதிக்கும். |
| 02. | கற்கை நெறியும் பயிற்சி நெறியும் | மூதவையின் சிபார்சிற்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட கற்பித்தல், பயிற்சிநெறி, பரீட்சை, ஆராய்ச்சி இவை செயற்படுத்தப்படும். பட்டப்பின்படிப்பு, புலமைப்பரிசில் போன்றவை பீடங்களிடையே பகிரப்படும். | முகாமைத்துவ சபை கல்வி, பாடத்திட்டம், பயிற்சி, ஆராய்ச்சி, பட்டப்பின்படிப்பு போன்றவற்றை செயற்படுத்தும். பட்டப்பின்படிப்பு, புலமைப்பரிசில் விசேட பயிற்சிகள் நிறுவகத்திற்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். |
| 03. | நிதிவளம் | பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படும் நிதி மாணவர் தொகைக்கேற்ப பீடங்கள் இடையே பகிரப்படும். | நிறுவனத்திற்கு நிதி நேரடியாக திறைசேரியில் இருந்து வழங்கப்படும். |
| 04. | நிர்வாகம் | பல்கலைக்கழகத்தில் முதன்மை அடிப்படையில் பீடங்களுக்குரிய தேவைகள் நிறைவேற்றப்படும். மற்றப் பீடங்களின் தலையீடுகள் இருப்பது தவிர்க்க முடியாது. | நிறுவனத்தில் அதன் வளர்ச்சிக்கான நடவடிக்கை மட்டும் தான் செயற்படுத்தப்படும். எந்தத் தலையீடுகளும் இருக்கமுடியாது. |
| 05. | நியமனங்கள் | பீடங்களுக்கான நியமனங்கள், பதவி உயர்வுகள், பதவி நீக்கம் என்பன பல்கலைக்கழக பேரவையால் செயற்படுத்தப்படும். துணைவேந்தருடன் பீடாதிபதியும் தேர்வுக்குழுவில் இருப்பார். | நிறுவனத்திற்கான நியமனங்கள், பதவிஉயர்வுகள், பதவி நீக்கம் என்பன நிறுவனத்தின் அத்தியட்சகர் தலைமையில் முகாமைத்துவ சபை நியமிக்கும் குழுவினால் தீர்மானிக்கப்படும். |
| 06. | தேவைகள் | பீடங்கள் பல ஒரு பல்கலைக்கழகத்தின் கீழ் செயற்படுவதனால் தேவைகள் மாணவர் தொகைக்கேற்பவும் அவசரத் தன்மை கருதியும் மற்றும் பீடாதிபதி, விரிவுரையாளர்களின் ஆளுமைக்கேற்பவும் பகுதியாகவோ, முழுமையாகவோ நிறைவேற்றப்படும்.<br>பீடங்கள் உருவாகுவதற்கு அடிப்படை வசதிகள் கொண்ட துறைகள் அவசியமாகின்றன. | நிறுவனத்தில் அந்த கற்கை துறைசார்ந்த தேவைகள் எவ்வித போட்டியுமின்றி நிறைவேற்றப்படும்.<br>நிறுவனத்தில் துறைகளின் அடிப்படை வசதிகள், அத்துறை சார்ந்த நிபுணத்துவம் உடையவர்களின் உதவியுடனும், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் நிபுணத்துவ சேவையை பயன்படுத்துவதன் மூலமும் விரைவில் பெற்றுக்கொண்டு, அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும். |
| 07. | கட்டடங்கள் | பீடங்களுக்கு தேவையான காணி கொள்வனவு கட்டடங்கள் அமைத்தல் எல்லாம் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும். எல்லாப் பீடங்களுக்கும் ஒரே நேரத்தில் இதனை நிறைவேற்றுவது கஷ்டமானது.<br>நூலகம், ஆய்வுகூடம், விரிவுரை மண்டபங்கள் ஆகியவை திட்டமிட்டு படிப்படியாகக் கட்டப்படும். | நிறுவனத்திற்கு தேவையான கட்டடங்கள், காணிக் கொள்வனவு போன்றவை முகாமைத்துவ சபையினால் துரிமாக மேற்கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகமானதாகவே உள்ளது. ஏனெனில் நிறுவனம் குறிப்பிட்ட துறையை முன்னேற்றுவதற்காகவே நிறுவப்பட்டுள்ளது.<br>காலம் தாழ்த்தாது கூடிய விரைவில் மேற்படி கட்டடங்கள் கட்டப்படும். |
| 08. | கல்வி தொடர்பான இணைச் செயற் பாடுகள் | கற்கை நெறியுடன் சம்பந்தப்பட்ட மற்றும் தொடர் கல்விகளை மேற்கொள்வது பீடங்களில் கஷ்டமானதாக அமையும்.<br>பிரத்தியேகமான கற்கை நெறிகளை நடாத்தி அதற்கான பணத்தை வசூலிப்பது நடைமுறைக்கு சாத்தியமாகாது. | ''நிறுவனம்'' அரச வைத்தியசாலைகளில் தொழில்புரியும் வைத்தியர்களுக்கு அவர்களுடைய தகுதிகாண் நிலைகளுக்கு வசதியாக கற்கை நெறிகளை நடாத்தும் சந்தர்ப்பம் இலகுவில் அமையப்பெறும்.<br>நிறுவனம் மேற் கூறப்பட்ட கற்கை நெறியை நடாத்தி பணம் வசூலிக்கும் அதிகாரம் உள்ளது.<br>கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உள்நாட்டு மருத்துவ நிறுவனத்தில் வைத்திய உத்தியோகத்தருக்கான கற்கை நெறிக்காக ரூபா 40,000/= ஒவ்வொருவரிடம் இருந்தும் அறவிடப்படுகின்றது. |
| 09. | கடமைகள் | பீடத்தின் சபைகள் ஒரு கொள்கைத் திட்டத்தை உருவாக்க முடியாது. | நிறுவனத்தின் முகாமைத்துவ சபை கொள்கைகள்ள வகுக்கவும் பேரவையின் அனுமதியுடன் செயற்படுத்தவும் அதிகாரம் கொண்டதாக அமைகிறது. |
| 10. | அங்கத்தவர்கள் | பீடத்தின் சபையில் பீடாதிபதி துறைத்தலைவர்கள், தொழில்சார் நிபுணர்கள் ஆகியோர் இடம்பெறுவர். | நிறுவனத்தில் பல அமைச்சின் செயலாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள், ஆயுள்வேத ஆணையாளர், போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி, பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் 6 சித்த வைத்தியர்கள், மருத்துவ பீட பிரதிநிதிகள், விவசாய பீட பிரதிநிதிகள் அங்கத்துவம் வகிப்பர். இதனால் பல கருமங்களை கஷ்டமின்றி முகாமைத்துவ சபை செய்யும். |
| 11. | அதிகாரங்கள் | பீடத்தின் சபைக்கு இருக்கும் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை<br>பீடாதிபதிக்கு உள்ள அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருக்கும் | மற்ற நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளும் அதிகாரம், நிதியை கையாளும் அதிகாரம் இருப்பதுடன், புறம்பாக நிதியாளர் ஒருவர் நிறுவனத்தின் தேவைக்காக நியமிக்கப்படுவார். அதுபோல் பதிவாளரும் நிறுவனத்தின் தேவைக்காக நிறுவனத்திற்காக நியமிக்கப்படுவார்.<br>அத்தியட்சகருக்கு உள்ள அதிகாரங்கள் பரந்து அமைவதுடன் சகல விடயங்களுக்கும் பொறுப்பு உள்ளவராகவும் இருப்பார். |

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் எந்த அமைப்பு முறை சித்தமருத்துவத்திற்கு உகந்தது என்பதை கல்விமான்களும், சமூக ஆர்வலர்களும், துறை அபிமானிகளும் தீர்மானிப்பதற்கு வழிகோலும் என நம்புகின்றேன்.

(0[illegible]ஆம் பக்கம் பார்க்க)

*தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது இன்னுயிர் நீக்கும் வினை*

-குறள்

# வலம்புரி

## மிதிவெடி அபாயம்

வடக்குக் கிழக்கு பிரதேசம் யுத்த பூமியாக மாறிய பின் அம் மண்ணில் நடமாடுவதே ஆபத்தான விடயமாகி விட்டது. யுத்தம் நடந்தால் மட்டுமல்ல; நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் கூட மிதி வெடிகளின் ஆபத்து நின்றுவிடப் போவதில்லை. எங்கு பார்த்தாலும் மிதிவெடி அபாயம். நிலத்தில் வைக்கும் ஒவ்வொரு காலடியையும் ஏக்கத்துடனேயே வைக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக பயிர் செய் நிலங்கள், வயற்பரப்புக்கள் என மக்கள் நடமாடும் இடங்களில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் எந் நேரமும் மனித அங்கத்தை சிதைத்து விட முடியும்.

உலக வரலாற்றில் நிலத்தின் கீழ் புதைக்கப்படும் மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் ஏற்படுத்தும் கொடூரம் கொஞ்சமல்ல. யுத்த உபாயத்தில் மிகப் பெரும் பயங்கரமாக மதிவெடிகள் காணப்படுகின்றன. போர்க்களத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் எதிரிகளை இலக்கு வைத்துத் தாக்குதல்களை மேற்கொள்வது வழக்கம். ஆனால்,போர் நடைபெறும் பூமியில் புதைக்கப்படும் மிதிவெடிகளோ போரில் ஈடுபடுபவர்களை மட்டும் அன்றி அது சாதாரண பொது மக்களையும் பழிவாங்கிவிடுகிறது.

இதனால் மனித சமுதாயம் நிரந்தர அங்கவீனத்தைத் தழுவிக் கொள்கிறது.இத்தகைய பாதிப்புக்களை இன யுத்தம் என்ற பெயரால் பெற்றுக் கொண்டவர்கள் ஈழத் தமிழர்கள். மிதிவெடி அனர்த்தத்தால் காலை இழந்தவர்கள், கையிழந்தவர்கள், கண்ணை இழந்தவர்கள் என ஓர் பட்டியலையே தயாரித்து விட முடியும். இதற்கு மேலாக, மிதிவெடியில் அகப்பட்டு உயிரிழந்தவர்கள் வேறு. இத்தகைய கொடூரத்தை இம் மண்ணில் இருந்து அகற்றுவதாயின் குறைந்தது நான்கு, ஐந்து வருடங்களாவது ஆகுமென மிதிவெடி அகற்றும் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

அவ்வாறாயின் இக் காலப் பகுதியில் நிலத்தின் கீழ் மறைந்திருக்கும் மிதிவெடிகளும், கண்ணி வெடிகளும் இன்னும் எத்தனையோ பேரை அங்கவீனமாக்கப் போகிறது. எனவே இது விடயத்தில் பொது மக்கள் மிகவும் விழிப்பாக இருப்பது அவசியமாகும் குறிப்பாக மீளக் குடியமர்ந்த மக்கள் தங்கள் பயிர்ச் செய் நிலங்கள் மற்றும் வயல்களில் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளும் போது. மிகவும் விழிப்பாக நடந்து கொள்ள வேண்டும்.

தற்போது மிதிவெடிகளின் ஆபத்துக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளிலேயே அதிகமாகவுள்ளது. இதனால் மீளக் குடியமர்ந்த இடங்களில் மிதிவெடிகள் உள்ள இடங்களை இனங்காண்பதும் அத்தகைய இடங்களில் நடமாடுவதை தவிர்ப்பதுடன் அங்குள்ள மிதிவெடிகளை அகற்ற நடவடிக்கை எடுப்பதும் மிதிவெடிகளினால் ஏற்படவிருக்கும் ஆபத்துக்களில் இருந்து பாதுகாப்பதற்கான வழியாகும்.

# போர்க்காலத்தில் புலிகளோடு தோளோடு தோள்நின்று துணை புரிந்தவை பனை தென்னை வள அபி.சங்கங்களே

## நிர்வாகசேவைப் பொறுப்பாளர் விஜிதரன் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சமாதானச் சூழ்நிலைக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பு அதிகளவில் காணப்படுகிறது. கடந்தகால யுத்தச் சூழ்நிலையில் எமக்குத் தோளோடு தோள் நின்று துணை புரிந்தவை இக்கூட்டுறவுச் சங்கங்களே.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணியும் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடாத்திய கூட்டுறவுத்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட நிர்வாக சேவைப்பொறுப்பாளர் சி.விஜிதரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய விஜிதரன்,

சமாதானச் செயற்பாடுகள் நீடித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் எமது இனம் பல வழிகளிலும் துன்பத்தை அனுபவித்து வருகிறது.

யுத்தத்திற்கு சரியான தீர்வு எட்டப்பட வேண்டுமென்ற நோக்குடன் நாம் பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்து வருகிறோம். அதனால்தான் மக்கள் இன்று நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த நிம்மதிக்காக பல உயிர்த் தியாகங்களை நாம் செய்திருக்கிறோம். இவ உயிர்த் தியாகங்கள் நீடிக்கக்கூடாது. அநத் வகையில் தான் சமாதானத்தை நாமும் எமது மக்களும் வரவேற்று நிலையான ஒரு தீர்வு காண முயலகின்றோம்.

இந்தக் கூட்டுறவு விழாவில் பங்கு கொண்டிருக்கும் அனைவருமசமாதானத்திற்கான தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இதே போன்று கூட்டுறவுப் பணியும் சிறப்பாக அமைய ஒத்துழைக்க வேண்டும்.

இன்றைய சமாதானச் சூழலில் பத்திரிகைகளைப் பார்க்கின்ற போது நாளுக்குநாள் நிலைமைகள் மாறிவருவதை உணரலாம். உங்களுக்குத் தெரியும் நாம் ஒரு பலம் வாய்ந்த அமைப்பாக இருந்து கொண்டுதான் சமாதானத்தை வலியுறுத்தி நிற்கின்றோம். இதிலிருந்து நீங்கள் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் சொந்தக் காலில் நிற்கின்றார்கள். அவரகளால் எதுவும் எப்போதும் செய்ய முடியும். ஸ்ரீலங்கா அரசாங்கம் சரியான முறையில் தீரவை உருவாக்கித் தருவார்கள் என்றால் நாம எமது எதிர்காலத்தை நல்ல முறையில் அமைக்க முடியும்.

வன்னியில் கடுமையான யுத்தம் நடந்துகொண்டிருந்த வேளையில் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக பாரிய திட்டங்களை நடைமுறைப் படுத்தினோம்.

அந்தவகையில், எமது நாடு விடுதலை அடைய ஒரு தலைமையின் கீழ் நம்பிக்கையுடனும் சுதந்திரமாகவும் நின்று அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.(உ-8)

# வடமராட்சி அகதிமுகாம்களில் தங்கியுள்ள 80குடும்பங்களை கற்கோவளத்தில் குடியமர்த்த அரசாங்க அதிபர் துரித நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களால் இடம் பெயர்ந்து நாகர் கோவில் பகுதியிலுள்ள 3 அகதி முகாம்களில் வாழும் 80 வரையான குடும்பங்கள்போர் ஓய்ந்த பின்னரும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாது இருப்பதைக் கவனத்தல் கொண்டு அவர்களுக்கு நிரந்தரவதிவிடங்களை அமைத்துக் கொடுப்பதற்குரிய தீவிர நடவடிக்கைகளை யாழ். அரச செயலகம் மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது.

நாகர்கோவில் பகுதியில் லக்ஷ்மன் தோட்டம், கற்கோவளம், சென்றூஸ ஆகிய 3 நலன்புரி நிலையங்களிலும் வசித்து வரும் மேற்படி மக்களால், நெருங்கிக்கொண்டிருக்கும் மழைகாலத்தை அங்கு கழிக்க முடியாது என்பதைக் கருத்திற்கொண்டே யாழ். அரச அதிபர் எஸ். பத்மநாதன் இந் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இவ் 80 குடும்பங்களையும் நாகா கோவில் கொட்டோடை ராஜன் நகரில் உள்ள அரச காணி மற்றும் அச்சுவேலி வளலாய்ப்பகுதி அரச காணிகளில் குடியமாத்த அரச அதிபர் முன்னர் எடுத்த முயற்சிகள் படையினரால் நிராகரிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து கற்கோவளம் புனித நகர் பகுதியில் இவர்களை குடியேற்றும் வகையிலான நடவடிக்கைகள் தற்போது தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகவும் இந் நடவடிககைகள் பூர்த்தியடையும் தறுவாயிலுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இம் மீள்குடியேற்றத் திட்டத்திற்கான நடடிக்கைகளில் யாழ். செயலகத்துடன் இணைந்து புனர்வாழ்வு அமைச்சு மற்றும் இந்து கலாசார அமைச்சு ஆகியனவும் செயற்பட்டு வருகின்றன. இவை மேற கொண்டுள்ள நடவடிக்கையின்படி இக் குடும்பங்கள் அனைத்திற்கும் பல அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, கற்கோவளம் புனித நகர் பகுதியில் குடியமர்த்தப்படவுள்ள மேற்படி 80 குடும்பங்களுக்கும் தலா 2பரப்பு நிலம் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரச செயலகம் தீர்மானித்துள்ளது.

அத்துடன்,இவர்களுக்கான மீள் குடியமர்வுக் கொடுப்பனவான 25ஆயிரம் ரூபாவை விரைந்து வழங்குவதற்கு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டமானது அடுத்தமாதத்திற்குள் அமுலாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-4)

# இடைக்கால நிர்வாக சபை யோசனை குறித்த எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டுக்கள் அரசினால் முற்றுமுழுதாக நிராகரிப்பு

## செய்தியாளர் மாநாட்டில் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் பற்றி எதிர்க்கட்சியினர் தெரிவித்து வரும் குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் முற்றாக நிராகரிததுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகத் தகவல் நிலையத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டின் போதே பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

இறுதி இணக்கப்பாடு ஏற்படாமல் இடைககால நிர்வாகத்தைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்து வரும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரம் அற்றவை அவற்றை அரசு முற்றாக நிராகரித்துள்ளது.

உள்ளக சுயநிர்ணய உரிமையுடன்கூடிய சமஷ்டி முறை தொடர்பான இறுதித் தீர்வுக்கு தேவையான அடிப்படை அம்சங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் முன் வைத்துள்ள யோசனைகள் குறித்து விடுதலைப் புலிகள் பிரான்சில் உள்ள தமது சட்ட வல்லுநர்களுடன் ஆராயவுள்ளனர். இதில் அரசாங்கத்தின் தரப்பில் எவரும் கலந்து கொள்ளமாட்டார்கள் என்றார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் இலங்கை வர்த்தகக் குழுவினரும் இன்று சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொளளவிருப்பதாகவும் அமைசசரவைப் பேச்சாளர் தெரிவித்துளளார். (உ-10)

# திணசரி தியானம்

## எங்கும் இறைவன்

இறைவனை ஒவ்வொரு முகத்திலும் பாருங்கள். உங்கள் பார்வையில் மாற்றம் வேண்டும். எப்பொருளை நீங்கள் பார்த்தாலும் அப் பொருளில் நீங்கள் கடவுளைக் காண வேண்டும். ஒரு தூணைப் பார்க்கையில் எனது இறைவன் நரசிம்ம மூர்த்தி இதில் இருக்கிறார் என்பதை உணர வேண்டும். பிரகலாதன் கதை உங்களுக்குத் தெரியும்.இதை ஒரு நிலையான பழக்கமாகக் கொள்ளுங்கள். இந்த எண்ணம் உங்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதிய வேண்டும் பிற பெயர்களும், உருவங்களும் எந்தச் சக்தியும் இல்லாதவை. உலகத்தில் பற்று வேண்டாம். எங்கும் இறைவனை மட்டும் பாருங்கள்

சுவாமி சிவானந்தர்

# தென்மோடி நாட்டுக் கூத்து போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலா மன்றம் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தவுள்ள நாட்டுக் கூத்து விழாவின் ஒரு அம்சமாகவும் பாரம்பரியக் கலைகளைப் பேணும் நடவடிக்கைகளின் ஒரு செயற்பாடாகவும் தென்மோடி நாட்டுக் கூத்துப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

செப்ரெம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத் தினம் எதிர்வரும் 18-ம் திகதி எனவும், விண்ணப்பிக்க விரும்புவோர் 'தென்மோடி நாட்டுக் கூத்துப் போட்டி', பொதுச் செயலாளர், திருமறைக்கலா மன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டுமெனவும் கேடகப்பட்டுள்ளது. (உ-8)

# வட- கிழக்கில் மாகாணசபை தேர்தல் நடத்துவது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பது பற்றி சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்ற பின்னரே தீர்மானிக்கபபடுமெனா உதவித் தேர்தல் ஆணையாளர் அருந்தவச்செல்வம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாகவும் அத்துடன் எதிர்வரும் 2004-ம் ஆண்டு ஜனவரி மாதம் வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான ஏற்பாடுகள் யாவும் தொடர்ந்து மேற் கொள்ளப் படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



# சிறுவர்களை இயக்கத்தில் சேர்ப்பதில்லையென புலிகள் உறுதிமொழி வழங்க வேண்டும்

## யுனிசெவ் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து செயற்பட்ட 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு இடைத்தங்கல் முகாம் மூலம் புனர்வாழ்வு அளித்து பெற்றோரிடம் ஒப்படைக்கும் திட்டம் உட்பட 10 திட்டங்கள் வடக்குக் கிழக்கில் அமுல் படுத்தப்படவுள்ளதாக யுனிசெவ்வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரெக்ஸ் சைபான் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஆயித்திய மலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இடைத்தங்கல் முகாமிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில், இத்திட்டம் வெற்றி பெறுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் சிறுவர்களை தமது இயக்கத்தில் சேர்த்துக் கொள்வது இல்லையென்று உறுதியளிக்க வேண்டும் என்றார்.

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறை வேற்றுப் பணிப்பாளர் ரெஜி அங்கு கருத்து வெளியிடுகையில்;

எமது கழகம் மேற் கொண்டு வரும் சிறுவர் திட்டங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பூரண ஒத்துழைப்பு வழங்கிவருகிறார்.

இதேசமயம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை புலிகள் அமைப்பின் கீழ் இயங்கும் நிறுவனம் என சிலர் கூறுவது மிகத் தவறான கருத்தாகும். இதில் எந்தவித உண்மையும் இல்லை என்றார்.இந் நிகழ்வில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி கருத்துத் தெரிவிக்கையில்;

சிறுவர்களுக்கு உதவும் வகையில் யுனிசெவ் மேற் கொண்டு வரும் இத்தகைய திட்டங்களுக்கு எமது பூரண ஒத்துழைப்புத் தொடர்ந்தும் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

(உ-10)

**இலவச கண்சிகிச்சை முகாம்**

யாழ். மத்திய கல்லூரி இன்ரறக்ட் கழகத்தால் 09, 10ஆம் (சனி, ஞாயிறு) திகதிகளில் இலவச கண்சிகிச்சை முகாம் நடாத்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் :- 09.08.2003, 10.08.2003 (சனி, ஞாயிறு)
காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை
இடம்:- மத்திய கல்லூரி தம்பர் மண்டபம்

தலைமை
Int.ச.சதீஸ்குமார்
(தலைவர் இன்ரறக்ட் கழகம்)

பிரதம விருந்தினர்
Rtn.R.சுரேந்திரன்
(தலைவர் றோட்டறிக் கழகம்)

சிறப்பு விருந்தினர்
Rtn.A.பஞ்சலிங்கம்
(முன்னாள் தலைவர் றோட்டறிக் கழகம்)
திரு.க.இராசதுரை
(அதிபர் யாழ். மத்திய கல்லூரி)
திருமதி பிரியா கருணாரட்ண
(கண் வைத்தியர்)

நன்றியுரை
திரு.ம.பிரசாந்தன்
(பொறுப்பாசிரியர் இன்ரறக்ட் கழகம்)

அனுசரணை:- கொழும்பு
ஹமி சரண நிறுவனம்
GAMI SARANA ORGANIZATION

மாணவர்கள், பெரியோர்களுக்கு கண் நோய்களுக்கான சகல வைத்திய பரீட்சைகளும் இலவசமாக செய்யப்படும். ரூ.3500க்கு மேல் பெறுமதியான பலரக கண்ணாடிகள் யாவும் ரூ.750க்கு வழங்கப்படும்.

அனைவரையும் பங்குபற்றிப் பலனடையுமாறு அழைக்கிறோம்.

(7418) இன்ரறக்ட் கழகம் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

# யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை

## பணிப்பாளர் சதுர்முகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பல்வேறுபட்ட நோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு அனுபவம் மிக்க வைத்திய நிபுணர்கள் போதியளவு நியமிக்கப்படாமையினால் வைத்திய பரிசோதனைகளை சிறந்த முறையில் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் சதுர்முகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள வைத்திய நிபுணர்கள் பற்றாக் குறையினால் நோயாளர்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகள் தொடர்பாக வலம்புரி செய்தியாளர் கேட்டபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்திய நிபுணர்கள் பற்றாக் குறை தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு ஏற்கனவே சுட்டிகாட்டியிருந்தோம் இதன் அடிப்படையில் ஒரு சில துறைகளுக்கு மாத்திரம் வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட் டனர்.

ஆனால் நோயியல்,உயிரியல் மற்றும் இருதயச்சிகிச்சை போன்ற துறைகளில் நிலவும் வெற்றிடம் இதுவரை நிரப்பப்படவில்லை.இதனால் சாதாரண டாக்டர்களே மேற்படி சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர் இந்நிலைமை காரணமாக நோயாளர்களுக்கு உரிய சிகிச்சைகளை வழங்குவதற்கு போதிய வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.(த-4)

### விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை சென்பீற்றர் ஆலயத்தின் கில்னர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (த)

### விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

### கண்ணி வெடித்ததில் அமெ.பணியாளர் காயம்

(வவுனியா)

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அமெரிக்க நாட்டை சேர்ந்த பணியாளர் ஒருவர் கண்ணிவெடி வெடித்ததனால் படுகாயமடைந்தார்.

### தமிழக...

நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வடமராடசி மீனவர்களை கேட்டிருக்கிற போதிலும் அவர்களை விடுவிக்க வடமராட்சி மீனவர்கள் மறுத்தனர்.

இதேவேளை மடக்கிப்பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 10 பேரும் தம்மை எக்காரணம் கொண்டும் பொலிஸில் ஒப்படைக்காது விடுவிக்குமாறு வடமராட்சி மீனவர்களிடம் கெஞ்சிக் கேட்டிருந்தனர். ஆயினும் இவர்களது கோரிக்கைகளை வடமராட்சி மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஏற்க மறுத்து அல்வாய் வடக்கு கிராம சேவையாளரிடம் ஒப்படைத்தனர்.

### நல்லூர் திருவீதியில்

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச இந்து பேரவையின் நல்லை கந்தன் உற்சவகாலத் தெய்வீக நிகழ்ச்சிகள் நேற்றுத் தொடக்கம் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் க. நித்தியானந்தன் தலைமையில் ஆரம்பமாகியுள்ளது இன்று பி.ப 6மணிக்கு ''சைவர்கள் சிந்திக்க வேண்டியவை'' எனும் பொருளில் மு.சிவலோகநாதன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ந-5)

---

இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரா, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசாமியுடன் தொழில் உதவிப்

## விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை சென்பீற்றர் ஆலயத்தின் கில்னர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (த)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் யுவசக்தி சனசமூக நிலையமும் இணைந்து நடாத்தும் யுவசக்தி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பி.ப 2.30 மணிக்கு சுதுமலை தெற்கு அ.த.க பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (த-252)

யாளர் கேட்டபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்திய நிபுணர்கள் பற்றாக் குறை தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு ஏற்கனவே சுட்டிகாட்டியிருந்தோம் இதன் அடிப்படையில் ஒரு சில துறைகளுக்கு மாத்திரம் வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட் டனர்.

ஆனால் நோயியல்,உயிரியல் மற்றும் இருதயச்சிகிச்சை போன்ற துறைகளில் நிலவும் வெற்றிடம்

## பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக சித்த மருததுவத்துறை மாணவர்கள் தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நேற்றுக் கைவிட்டனர்.

சித்த மருத்துவத்துறையை பீடமாக்கலுக்கான செயற்பாடுகளுடன் அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்வதென சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கு அதன் முகாமைக் குழு கூறியதையடுத்து புரிந்துணர்வு அடிப்படையில் போராட்டம் கைவிடப் பட்டது. (ந-5)


## டொனால்ட் கணேஷகுமார் கிரிக்கட் சுற்றுப்போட்டி

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும்
50 ஓவர்கள் கொண்ட டொனால்ட்
கணேஷகுமார் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை
09.08.2003 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு
யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு.க.இராசதுரை
அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.
யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில்
நடைபெறவுள்ள இப்போட்டியில்
சென்றலைட்ஸ் வி.க. (சொக்ஸ்) அணியை
எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி
மோதவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக
போட்டிக்குழு.

(C/6555)


நிலை தோன்றியுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.(த-4)

## கண்ணி வெடித்ததில் அமெ.பணியாளர் காயம்

(வவுனியா)

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அமெரிக்க நாட்டை சேர்ந்த பணியாளர் ஒருவர் கண்ணிவெடி வெடித்ததனால் படுகாயமடைந்தார்.

கண்ணிவெடிகளை அடையாளங் கண்டு அதனை மீட்கும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே புதையுண்டிருந்த கண்ணிவெடி வெடித்தது.

படுகாயமடைந்த அவர் பரந்தனிலிருந்து உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக நேற்றிரவு விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (த-13)

## பிரதமர் ரணில் சீனா பயணம்

(கொழும்பு)

உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சீனா செல்கின்றார்.

இரு நாடுகளிற்குமான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதே இப் பயணத்தின் நோக்கம் என அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (ந-5)

## பாம்பு தீண்டி சிப்பாய் மரணம்

(கொழும்புத்துறை)

நித்திரையில் இருந்த இராணுவ சிப்பாயைப் பாம்பு தீண்டியதில் அவர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கொழும்புத்துறை மலை வேம்புச் சந்தியில் உள்ள காவலரணில் இடம்பெற்றது.

வாயால் நுரை வெளியேறிய நிலையில் இவரது சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் மரண விசாரணையின் பின்பு கொழும்பிலுள்ள அவரது வீட்டுக்கு அனுப்பப்பட்டது. (த-51)

விக்க வடமராட்சி மீனவர்கள் மறுத்தனர்.

இதேவேளை மடக்கிப்பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 10 பேரும் தம்மை எக்காரணம் கொண்டும் பொலிஸில் ஒப்படைக்காது விடுவிக்குமாறு வடமராட்சி மீனவர்களிடம் கெஞ்சிக் கேட்டிருந்தனர். ஆயினும் இவர்களது கோரிக்கைகளை வடமராட்சி மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஏற்க மறுத்து அல்வாய் வடக்கு கிராம சேவையாளரிடம் ஒப்படைத்தனர்.

தமிழ்நாடு, நாகபட்டினத்தைச் சேர்ந்த 10 மீனவர்களும் இரண்டு மீன் பிடி றோலர் படகுகளில் வந்திருந்தனர்.

அவர்களின் விபரம் வருமாறு; ‘கவிதா’ எனப் பெயர் சூட்டப்பட்ட படகில்-தங்கப்பன் சுப்பிரவேலு (வயது23) தங்கப்பன் மகேந்திரன் (வயது 33) வைத்தியநாதன் சுரேஸ் (வயது20) மாணிக்கவேல் சுரேந்தர் (வயது 18) மாணிக்கவேல் வீரமணி(வயது 30), ஆகியோரும், ‘நீலாபதி’ எனும் படகில் பழனியப்பன் செந்தில் (வயது 28) திருவோணம் பாலமுருகன் (வயது 29) திருவோணம் பழனிவேல்(வயது27), திருவோணம் குமார்(வயது 22), திருவோணம் அமிர்தவேல் (வயது 20), ஆகியோரே படகில் வந்தவர்கள் ஆவர்.

இது இவ்விதம் இருக்க நேற்றைய தினம் இன்பருட்டியில் இது தொடர்பாக 524 படையணியின் பிரிகேடியர் தல்காகொட, பருத்தித்துறை கடற்படைத் தளபதி றொகான், மனித உரிமைகள் ஆணைக்குழுவின்

---

## யப்பான்...

வரைபு பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களினால் அடுத்த வாரம் ஆராயப்படவிருப்பதனால் உரிய பதிலை புலிகள் அரசுக்கு அனுப்பி வைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கான நிதியுதவி மாநாட்டின் பின் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்க எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்ததை அடுத்து யப்பானின் விஷேட பிரதிநிதி யசுஸி அகாஸி மீண்டும் இலங்கை வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

நல்லை கந்தன் உற்சவகாலத் தெய்வீக நிகழ்ச்சிகள் நேற்றுத் தொடக்கம் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் க.நித்தியானந்தன் தலைமையில் ஆரம்பமாகியுள்ளது இன்று பி.ப மணிக்கு ‘‘சைவர்கள் சிந்திக்க வேண்டியவை’’ எனும் பொருளில் மு.சிவலோகநாதன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ந-5)

---

இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரா, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசாமியுடன் தொழில் உதவிப் பணிப்பாளர் எஸ்.ஜோசப், எஸ்.தர்மலிங்கம், ஆகியோர் வடமராட்சி மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். (த-16,43,52)

---

## புலிக்கொடி...

எழிலன் எடுத்துரைத்துள்ளார்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் புலிக்கொடி ஏற்றுவதும், விடுதலைப் புலிகள் தொலைத் தொடர்பு கருவிகளுடன் நடமாடுவதும் தற்போதைய சமாதான சூழ்நிலைக்கு விரோதமானது என்றும் இது போர் நடவடிக்கைகளைத் தூண்டும் செயலாக அமைகின்றது என்றும் இராணுவத்தினர் இவ்வாறான செயல்களை ஆட்சேபித்து வருவதாகவும் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் இது விடயம் தொடர்பாக எதுவிதமான முடிவுக்கும் தங்களால் வரமுடியாதென்றும் பாதுகாப்புத்துறை மற்றும் விடுதலைப் புலிகளின் உயர் மட்டத்தினரும் கலந்துரையாடி முடிவு காண்பதே சரியானதாக இருக்கும் என்றும் படைத் தரப்பு இச் சந்திப்பின் போது கூறியதாகத் தெரியவருகிறது. (உ-8)

---

## வன்னி...

கொண்டார். இதனை அடுத்து குறிப்பிட்ட இளைஞன் கூட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதுடன் சிவசக்தி ஆனந்தன் விடுதலைப் புலிகளின் பாதுகாப்புடன் வவுனியாவுக்குச் சென்றார்.

இதேவேளை சேமமடுப்பிரதேசம் சிவசக்தி ஆனந்தனின் சொந்த இடம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-13)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும். முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.